விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 15 திங்கட்கிழமை (01.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அச்சுறுத்தல்கள் தொடர்ந்தால்

# புலிகள் அமைப்பு மீண்டும் உருவாகும்

## சம உரிமைகளுக்கான அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

எங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். எனினும் இன்று வாய்களை மூடிக் காண்டிருந்தாலும் இன்னும் 15 வருடங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு ண்டும் உருவாகும் என சம உரிமைகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த மைப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவம் அண்மையில் கொழும்பு பொது ரலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது அதில் உரையாற்றிய செயற்பாட் ாளர்கள் இதனைக் கூறியுள்ளனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை – நோர்வே புதிய ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் இருதரப்பு உறவுகள் தொடர்பில் புதிய யுகம் ஆரம்பித்திருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தமது நாடு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கும் என இலங்கைக்கான நோர்வே

(20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடைக்கு ஆதரவு திரட்டும் தமிழக அரசு

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு தரவு தெரிவிக்கும் வகையில், சட்ட விரோத டிக்கைகள் தீர்ப்பாயத்தில் தமிழக அரசு ல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் மீதான தடை புக்கு சரியான காரணங்கள் உள்ளதா? லையா? என்பது தொடர்பாக சட்டவிரோத வடிக்கைகள் தீர்ப்பாயம் சென்னையில் ்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் விசாரணையை மேற்கொண்டது.

டில்லி உயர்நீதிமன்றநீதிபதி வி.கே.ஜெயின் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்ற விசாரணையில், தமிழக கியூ பிரிவு எஸ்.பி.சம்பத் விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான ஆவணங்களைச் சமர்ப்பித்தார்.

இந்த ஆவணங்கள் 2 பெரிய தொகுப்புக்களாக சீல் வைக்கப்பட்ட உறைகளில் அளிக்கப்பட்டன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைக்க இந்தியா முயற்சி!

### இந்திய ஊடகங்கள் தெரிவிப்பு ; அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைக்க இந்தியா முயற்சித்து வருவதாக இலங்கை குற்றம் சுமத்தியுள்ளது என இந்திய ஊடகங்கள் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக இலங்கை அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாகவும், ஜனாதிபதியின் முயற்சியை கடந்த கால முயற்சிகளுடன் ஒப்பீடு செய்வது தவறானது எனவும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உயர் ஸ்தானிகருடன் கூட்டமைப்பு இன்று பேச்சு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று லங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சோக் கே காந்தாவை சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் லைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற றுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், செல்வம் டைக்கலநாதன், மாவை சேனாதிராஜா ற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோர் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்த நிலையில் அங்கு மேற்கொள்ளப்படவுள்ள சந்திப்புக்கள் குறித்து இறுதிப்படுத்துவதற்காகவே உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை இல்லாது ஒழிக்க பிராந்திய நாடுகள் இணைய வேண்டும்

### செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதெழிப்பதற்கு பிராந்திய வலய நாடுகள் இணைந்து செயற்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. தெற்காசிய பிராந்திய வலய நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் பயங்கரவாதத்தை இல்லாதெழிக்க முடியும் என அமைச்சர் டபிள்யூ.ஜே.செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)



திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான நந்தன வருடம் புரட்டாதி மாதம் 15ம் நாள் (01.10.2012) இன்று திங்கட்கிழமை மதியம் 12.00 மணி முதல் 01.00 வரை உள்ள ரேவதி நட்சத்திரமும் தனு லக்கினமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

L

டயஸ் லேணர்ஸ்

(சாரதிப் பயிற்சிப் பாடசாலை)

எனும் ஸ்தாபனத்தை திறந்து வைக்க இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து

01.10.2012 தொடக்கம் 31.10.2012 வரை பதிவு செய்யும் அனைவருக்கும் 10 % கட்டணக்கழிவு வழங்கப்படும்

இல. 189 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 0777942312, 021 2219442


இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
திரு. தி. டயஸ்

(529)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வோட்சனின் அதிரடியில் அவுஸ்திரேலியா அபார வெற்றி



தென் ஆபிரிக்க அணிக்கெதிரான இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர்-8 சுற்றில் அவுஸ்திரேலியா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கையில் நடைபெற்று வரும் இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் -8 சுற்றின் பிரிவு- 2இல் இடம் பெற்றுள்ள அவுஸ்திரேலியா, தென் ஆபி ரிக்க அணிகள் மோதின.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன் மூலம் தென் ஆபிரிக்க அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. தொடக்க வீரராக களமிறங்கிய லெவி ஓட்டங்களின்றியும், அடுத்து களமிறங்கிய காலிஸ் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். டுமினி 30 ஓட்டங்களும் டிவில்லியர்ஸ் 21 ஓட்டங்களும் றொபின் பீட்டர்சன் 32 ஓட்டங்களும் எடுத்தனர்.

தென் ஆபிரிக்கா 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 146 ஓட்டங்கள் எடுத்தது.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக டுகார்டி 3 விக்கெட்டுகளும், ஷேன் வோட்சன் 2 விக்கெட்டுக்களும் கைப்பற்றினர்.

147 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 17.4 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு இலக்கை அடைந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தொடக்க வீரராக களமிறங்கிய ஷேன் வோட்சன் 8 பவுண்டரி, 2 சிக்ஸருடன் அரைச்சதம் கடந்து 70 ஓட்டங்களும், மைக்கல் ஹஸ்சி 45 ஓட்டங்களும், காமிரான் ஒயிட் 21 ஓட்டங்களும் எடுத்தனர்.

அவுஸ்திரேலியாவின் ஷேன்வோட்சன் ஆட்ட நாயகனாக தெரிவானர்.

# பாகிஸ்தானை வென்றது இந்தியா



இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நான்காவது உலகக் கிண்ண இருபது-20 கிரிக்கெட் போட்டி இம்முறை இலங்கையில் நடைபெற்று வருகின்றது.

நேற்று இரவு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இடம்பெற்ற சுப்பர் 8 போட்டியில் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மொகமட் ஹபீஸ் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

அதன் அடிப்படையில் 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 128 ஓட்டத்தினை மாத்திரமே பெற் றுக் கொண்டது. அதிகபட்சமாக சொபி மலிக் 28 ஓட்டத்தினையும் உமர் அக்மல் 21 ஓட்டத்தையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் தமிழக வீரர் லட்சுமிபதி பாலாஜி 3 விக்கட்டுக்களையும், அஸ்வின், யுவராஜ்சிங் தலா 2 விக்கெட்டுக்களையும் பதான், கோலி தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

129 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தனது வெற்றி இலக்கை 2 விக்கெட் இழந்து 17ஆவது ஓவரில் அடைந்தது.

துடுப்பாட்டதில் கோலி ஆட்டமிழக்காமல் 78 ஓட்டத்தினையும் சேலாக் 29 ஓட்டத்தினையும் யுவராஜ் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரசா ஹசன், சயிட் அப்பிரிடி தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் விராட் கோலி தெரிவு செய்யப்பட்டார்.

## வெற்றித்தேர்வு நாயகனை வாழ்த்துகின்றோம்



வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தால் 01.08.2012 அன்று யாழ். நகரின் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்ட மாபெரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு வெற்றித்தேர்வு பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றித்தேர்வு வளவாளர்களால் முதன்மைநிலை மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்ட

**செல்வன் பா. அபிராம் அவர்கள்**

தேசிய பரீட்சையிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று தமிழ்மொழிமூலம் தேசிய மட்டத்தில் முதன்மைநிலை மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டமையை மனதார வாழ்த்துவதுடன்

2012ஆம் ஆண்டிற்கான "வெற்றித்தேர்வு நாயகன்" விருதினையும் வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம். இதேபோல் மாவட்ட மட்டத்தில் முதல் ஐந்து இடங்களையும் பெற்று சாதனை படைத்த ஏனைய வெற்றித்தேர்வு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
முகாமைத்துவப் பணிப்பாளர், ஆசிரியர்கள், வளவாளர்கள், இணைப்பாளர்கள்
வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

# டிக்கெட்டுக்கள் திருடிய பிரித்தானிய பிரஜை கைது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான 100 டிக்கெட்டுக்களை திருடிய பிரித்தானிய பிரஜை ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அனுமதிச் சீட்டு விற்பனை நிலையம் ஒன்றிலேயே குறித்த பிரித்தானிய பிரஜை டிக்கெட்டுக்களைத் திருடியுள்ளார்.

திருடிய ஒவ்வொரு அனுமதிச் சீட்டின் பெறுமதி 750 ரூபாய், 250 ரூபாய் எனவும் மொத்தப் பெறுமதி 70 ஆயிரம் ரூபாய் என கணிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

54 வயதுடைய ஒருவரே இத் திருட்டில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கைது செய்யப்பட்ட நபரை இன்று நீதி மன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (எ-11)


மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன
MACK POWER
கிர்லோஸ்கார் மின்சார பிறப்பாக்கி



குறைந்தபட்ச செலவு
இலகுவாக பராமரித்தல்
விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்
ரூபா 595,000 முதல்....
உடன் அழையுங்கள் 071-4269470 077-7563453
சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
US Tire 1/11 நியமத்தின் பிரகாரம் வெளியேற்றல்
மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10, ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு-08
தொலைபேசி: 011-2691186, தொலைநகல்: 011-2699454
இணையம்: me@mackwoods.com
மின்னஞ்சல்: www.mackwoods.com
(அ/1071)

## மரண அறிவித்தல்

# அம்பலம் சீனியர்



காரைநகர் விக்காவிலை பிறப்பிடமாகவும் காரைநகர் பொன்னம்பலம் வீதி, வவுனியா, தொல்புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் சீனியர் அவர்கள் 30.09.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம்-பொன்னாத்தை தம்பதிகளின் அன்பு மகனும், தம்பையா-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவயோகமலர் அவர்களின் பாசமிகு கணவரும் பரமேஸ்வரி, சரவணபவா (டிப்பர் உரிமையாளர்), சறோஜினி தேவி, யோகராணி, பரமலிங்கம், பஞ்சாட்சரம், யுகநேசன், சந்திரமலர், தர்மதேவி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், புலேந்திரன், விமலவதி, சிவபாதம், குமரகுரு, றெஜீனாதேவி, ஜெயவதனி, சத்யவாணி, ஏகாம்பரம், கிருபானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.10.2012) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனத்திற்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(534)

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் தகவல் : குடும்பத்தினர்

## வாழும் கலைப் பயிற்சி



மூச்சுப் பயிற்சி / பிராணாயானம்/
சுதர்சனக்கிரியா /தியானம்/ யோகா
01.10.2012 அறிமுக உரை : (இலவசம்)
நேரம் : 5.00 - 6.00 மணி வரை
இடம் : மகேஸ்வரன் மணி மண்டபம், நல்லூர்
Ph: 0770474757 (528)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாயை மூடுங்கள்...!

ஒரு பாடசாலையில் வகுப்பாசிரியர் வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மேசையின் மீது மூன்று குரங்கு பொம்மைகள்.

"மாணவர்களே! இந்தப் பொம்மைகளைக் கவனியுங்கள். இவை என்ன?"

"குரங்குப் பொம்மைகள்?"

"இந்தப் பொம்மைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?"

"ஒன்று கண்ணை மூடிக்கொண்டிருக்கிறது... ஒன்று காதை மூடிக்கொண்டிருக்கிறது... மற்றையது வாயை மூடிக்கொண்டிருக்கிறது...

"சற்று விபரமாகச் சொல்லுங்கள்– எப்படி அவை கண்ணையும்; காதையும் வாயையும் மூடிக் கொண்டிருக்கின்றன?"

"சரி... இப்போது சொல்லுங்கள்... இதற்கு என்ன அர்த்தம்?"

"தீயவற்றைப் பார்க்காதே... தீயவற்றைக் கேட்காதே... தீயவற்றைப் பேசாதே..."

"சரி... இப்போது இன்னொரு முக்கியமான கேள்வி. இரண்டு கண்களை இரண்டு கைகளால் மூடுவது சரி... இரண்டு காதுகளை இரண்டு கைகளால் மூடுவதும் சரி... ஒரு வாயை எதற்காக இரண்டு கைகளால் மூடவேண்டும்? ஒரு கையே போதுமே...?"

மாணவர்களிடமிருந்து இந்தக் கேள்விக்குப் பதில் ஏதும் வரவில்லை.

ஆசிரியர் விளக்கினார்...

மாணவர்களே! கண்களுக்குப் பார்ப்பது மட்டுமே வேலை. காதுகளுக்குக் கேட்பது மட்டுமே வேலை. ஆனால், வாய்க்கு மட்டும் இரண்டு வேலைகள், சாப்பிடுகிற வேலை ஒன்று. பேசும் வேலை ஒன்று. இவை இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே ஒரு வாயை இரண்டு கைகளால் மூடியிருக்கிறது"

மாணவர்கள் முகத்தில் தெளிவு பிறந்தது. இப்போது ஆசிரியர் கூறினார்;

"இன்னும் ஒரு கருத்தையும் இப்போது உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நாம் பேசுவதைப் பொறுத்த வரையில் இரண்டு விதமான தவறுகளைச் செய்கிறோம். பேச வேண்டியபோது பேசாமல் அமைதி காப்பது... ஒரு தவறு. பேசாமல் இருக்க வேண்டியபோது பேசி விடுவது ஒரு தவறு"

மாணவர் ஆர்வத்தோடு கவனித்தார்கள். ஆசிரியருக்கு உற்சாகம் பிறந்தது. உடனே ஒரு கதை சொல்ல ஆரம்பித்தார்.

சீன தேசத்திலே கதை இது.

ஒரு கிராமத்திலே விவசாயி இருந்தார்.

அவரது வீட்டிலே எலித் தொல்லை அதிகமாக இருந்தது. ஊரிலே திருடர்கள் தொல்லை அதிகமாக இருந்தது. அதனாலே எலிகளை விரட்டுவதற்காக ஒரு பூனையை வளர்த்தார்.

திருடர்களை விரட்டுவதற்கு ஒரு நாயை வளர்த்தார். அந்தப் பூனை எப்போது பார்த்தாலும் "மியாவ் மியாவ்" என்று கத்திக் கொண்டே வீட்டைச் சுற்றி வலம் வரும். இரவு பகலாகக் கத்தும். அதனால் எலித்தொல்லை இல்லை. எல்லா எலிகளும் ஓடிப் போய் ஒளிந்து கொள்ளும்.

ஆனால், இன்னொரு தொல்லை. அந்தப் பூனை இரவு பகலாக சத்தமிடுவதால், இந்த விவசாயினால் இரவினில் தூங்க முடியவில்லை.

ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு அந்தப் பூனை அருகில் போனார்.

"உன்னை யார் இப்படி உரத்துக் கத்தச் சொன்னது?" என்று இரண்டு அடிகள் கொடுத்து மிரட்டினார்.

அந்தப் பூனை அடிவாங்குவதை அங்கேயிருந்த நாய் பார்த்துக் கொண்டே இருந்தது... அதன் உடம்பு நடுங்கியது.

"சத்தம் போட்டால் நாமும் இது மாதிரித்தான் அடி வாங்கிக் கட்டுவோம்; இனிமேல் வாயைத் திறக்கக்கூடாது. அதுவே நல்லது" என்று முடிவு செய்தது.

அன்றிரவே அந்த வீட்டுக்கு திருடர்கள் வந்து விட்டார்கள். வீட்டிலே இருந்த பெறுமதிமிக்க பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டு சென்று விட்டார்கள். இந்த நாய் இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தது. ஆனாலும் வாயைத் திறக்கவில்லை... விடிந்ததும் விவசாயி எழுந்தான். வீட்டில் திருட்டுப் போன சம்பவம் அவனுக்கு தெரிந்தது.

பூனையை அடித்த அதே குச்சி எடுத்துக் கொண்டு நாயிடம் போனார்.

"இரவு பூராகவும் வாயை மூடிக்கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தாயே?" திருடனைப் பார்த்தால் குரைக்காத நீயும் ஒரு நாயா...?" என்று சொல்லிவிட்டு நாய்க்கு நல்ல மொத்து மொத்தினார். அடி வாங்கிய நாய் கத்திக் கொண்டு கொல்லைப் பக்கம் ஓடிச் சென்றது.

அதன்பின் அது மனதினுள் நினைத்தது..."சே! என்ன மோசமான மனிதர்கள்... வாயைத் திறந்து கத்தினாலும் அடிக்கிறார்கள்... வாயை மூடினாலும் அடிக்கிறார்கள்"

ஒரு பேச்சுவார்த்தை நடக்கும் போது யார் பேச வேண்டும் என்பது முக்கியம். யார் பேசாமல் இருக்க வேண்டும் என்பது அதை விட முக்கியம்.

சும்மா இருக்க வேண்டிய நேரத்தில் பேசுவதும் தவறு. பேச வேண்டிய நேரத்தில் அமைதியாக இருப்பதும் தவறு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் 9 ஆயிரம் வீடுகள் வேறு மாகாணத்திற்கு

## வடக்கிற்கு 41 ஆயிரம் வீடுகள் மட்டுமே

வடமாகாணத்திலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளதாக கூறப்பட்டிருந்த போதும் 41 ஆயிரம் வீடுகள் மட்டுமே வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய 9 ஆயிரம் வீடுகளில் 6 ஆயிரம் வீடுகள் கிழக்கு மாகாணத்திற்கு 3 ஆயிரம் வீடுகள் மலையக மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அந்த அரசாங்கம் முன்வந்த போதும் காலப்போக்கில் உடன்படிக்கைக்கு விரோதமாக வீடுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

நீண்டகால யுத்தத்தினால் பல அழிவுகளை எதிர்கொண்ட வட மாகாண மக்களுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளில் பிரதானமான ஒன்றாக மாறியுள்ள வீட்டுத் தேவையானது இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் வேறு மாகாணங்களுக்கு வீடுகளை பகிர்ந்தளிக்க இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களுக்கும் இந்தியன் வீட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்ட நிதியின் ஊடாக 35 ஆயிரம் வீடுகள் புதிதாக கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இதில் யாழ்.மாவட்டத்திற்கு 8 ஆயிரத்து 700 வீடுகளும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 7 ஆயிரத்து 100 வீடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 7 ஆயிரத்து 500 வீடுகளும் வவுனியா மாவட்டத்திற்கு 4 ஆயிரத்து 200 வீடுகளும் மன்னார் மாவட்டத்திற்கு 7 ஆயிரத்து 500 வீடுகளும் மொத்தமாக 35 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இதுதவிர ஏற்கனவே எல்லா மாவட்டங்களிலும் தலா ஆயிரம் வீடுகள் இந்தத் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்படவுள்ளதோடு வடக்கு மாகாணத்தில் இந்தியன் வீட்டுத்திட்ட முன்னோடியாக ஆயிரம் வீடுகள் முதற்கட்டமாக கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாணத்திற்கு 41 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்ற அதேவேளை 6 ஆயிரம் வீடுகள் கிழக்கு மாகாணத்திற்கும் 3 ஆயிரம் வீடுகள் மலையக மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (அ-6)

# முதியோர் வாரத்தின் முதலாம் நாள் நிகழ்வு

கைதடி சாந்தி நிலையத்தில் முதியோர் வார நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கைதடி அரச முதியோர் இல்லமும் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் அறிவித்துள்ளது.

இதன் முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், கௌரவ விருந்தினர்களாக அரச முதியோர் இல்ல முன்னாள் அத்தியட்சகர் என்.இராஜலிங்கம், யாழ்.மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஆ.ஞானவேல் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கண்காட்சியை ஆரம்பித்து வைத்தல், விழிப்புணர்வுப் பிரசாரம் வெளியிடல், யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளன. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 |
| தக்காளி | 70 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 40 |
| கோவா | 90 | 60 | 60 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 60 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 40 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 160 | 90 |
| பீற்றூட் | 70 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 40 |
| போஞ்சி | 100 | 100 | 130 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 50 |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 320 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 28-30 |

# இராசி பலன்

*01.10.2012*

*(புரட்டாதி 15, திங்கட்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*

*பிரதமை முற்பகல் 10.16 மணிவரை*

*ரேவதி மாலை 6.10 மணிவரை*

*இராகுகாலம் 7.32-9.02 மணிவரை*

*சுபநேரம் 12.02-1.32 மணிவரை*

**மேடம்** அலைச்சல்கள் சற்று அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், சயன சுகக்குறைவான நாள், உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

**இடபம்** எடுத்த காரியங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் மத்தியில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** தொழிலில் கடின முயற்சியில் ஈடுபாடு காட்டுவீர்கள், மற்றவர்கள் உதவி செய்ய முன்வருவர், சுப செய்திகள் வந்து சேரும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், புகழ்மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** எதிர்பாராத அச்சங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்பட இடமுண்டு, பணக் குறைவுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கன்னி** அபூர்வ சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமான நாள், உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

**துலாம்** பகைவர்கள் விலகுவர், செய் தொழில் விருத்தி உண்டு, திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், வருமானம் திருப்தி தரும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** வியாபார மேன்மையுண்டு, இனிய சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் தேவைகளில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முயற்சி மேலோங்கும், பம்பரமாகச் சுழன்று பணி புரிவீர்கள், சுப காரிய செலவுகள் அதிகமாகும், பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள்.

**மகரம்** கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள், அந்நியர் சந்திப்புகள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நல்லவர்கள் தொடர்புகள் நீடிக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** சயன சுகமுண்டு, பயணங்களால் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம்




(யாழ்ப்பாணம்)

இன்று அனுஷ்டிக்கப்படும் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பிலான விழிப்பணர்வு ஊர்வலம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. சர்வோதய நிறுவனத்தின் ஏற்பாட்டில் பல சமூக நிறுவனங்கள் மற்றும் மாதர் சங்கத்தினரின் அனுசரணையுடன் இவ் ஊர்வலம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து பிரதேசங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் பெருமளவிலான சிறுவர், சிறுமிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் கலந்து கொண்டிருந்த சிறார்கள் தமது கைகளில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக குரலெழுப்புவோம். பாதுகாப்பான ஸ்பரிசம் பற்றி உங்கள் குழந்தைகளுக்கு அறிவூட்டுங்கள். சிறுவர்களினை துஷ்பிரயோகப்படுத்துவதற்கு எவருக்கும் உரிமையில்லை. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி நீங்கள் அறிந்தால் அல்லது பார்த்தால் உடனடியாக முறைப்பாடு செய்யுங்கள். சிறுவர் துஷ்பிரயோகத்தினை உடன்நிறுத்துங்கள்!. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளுக்கு 1929 ஐ அழையுங்கள் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக் கொண்டு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஊர்வலம் காலை 9.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியினூடாக ஆரம்பித்து யாழ்நகர் வீதியினூடாக சென்று மீண்டும் யாழ்.மத்திய கல்லூரியிலேயே முடிபடைந்தது.

இவ் விழிப்புணர்வு ஊர்வலம் வடக்கு, கிழக்கிலுள்ள பல மாவட்டங்களிலும் தென்பகுதியிலும் நடைபெற்றுள்ளது. (அ-4)


# வந்தது மழை; நிறைந்தது குழி!

## பயணிகள் பெரும் சிரமம்

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள வீதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் அவ்வீதியூடாக பயணங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மாணவர்களும் மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர். மேற்படி வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள வீதிக்கு நேற்றுப் பெய்த கடும் மழையினால், இந்நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வீதியால் செல்லும் பாதசாரிகள் மீது வாகனங்கள் செல்லும் போது சேறுகள் வீசப்படுகின்றன. அத்துடன் பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மீதும் சேறுகள் வீசப்படுகின்றன.

எனவே பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் நிலையைக் கருத்திற் கொண்டு மேற்படி வீதியை செப்பனிட்டுத் தருமாறு பாடசாலைச் சமூகம் உரியவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றது. (அ-9-24)




# எமது வளங்களை பயன்படுத்தி தொழிலை உருவாக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பெண்களும் பாரிய கைத்தொழில்களில் முதலிடுவதற்கு இங்குள்ள மன்றங்கள், நிறுவனங்கள் உதவி புரிதல் வேண்டும் என நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அங்கு கலந்து கொண்டவர்களினால் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு,

தமிழர்களிடம் யாரிடமும் இல்லாதவொரு திறமையுள்ளது. எனினும் அவர்களிடம் காணப்படுகின்ற சிறு பலவீனங்களால் எமது பாரம்பரியங்கள் அழிக்கப்படுகின்றன.

நாம் தற்போது அரச உத்தியோகம் பெறுவதற்காக சந்திக்கு சந்தி கொடிகளை ஏந்த வேண்டியுள்ளது. ஆனால், இது எமக்கு அவசியமேயில்லை. எம்மிடம் நிறைய இயற்கை வளங்கள் உள்ளன. அதனைப்பயன்படுத்தி நாமே ஒரு சுயதொழிலை உருவாக்க முடியும். இதனை விட இவ்வாறான நிகழ்வுகளை எல்லோருக்கும் நன்கு தெரிந்த தாய் மொழியில் நடத்துவதும் நல்லது என இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-4)




# இளைஞருக்கு விளக்கமறியல்; சிறுவர் நீதிமன்றம் உத்தரவு

(கரவெட்டி)

வடமராட்சி கெருடாவில் பகுதியில் சிறுமியை கடத்திச் சென்று திருமணம் செய்யும் நோக்கில் வைத்திருந்த இளைஞர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.சிறுவர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெருடாவில் பகுதியில் சம்பவ தினம் 15 வயதுச் சிறுமியை காதலித்து வந்த இளைஞன் சிறுமியை கடத்திச் சென்று கம்பர் மலை பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்திருந்தார். இச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோரால் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து 15 வயதுச்சிறுமியையும் அவரை திருமணம் செய்யும் நோக்கத்துடன் கடத்திச் சென்ற 20 வயது இளைஞனையும் கைது செய்த வல்வெட்டித்துறை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சிறுவர் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜீவராணி சிறுமியை கடத்திய இளைஞரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் உத்தரவிட்டார். (அ-9-24)

# 10 தொழிற்சாலைகளை இவ்வருட இறுதிக்குள் அமைக்க ஏற்பாடு

## வர்த்தக தொ.ச.மன்றம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இவ்வருட இறுதிக்குள் 10 தொழிற்சாலைகளை அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதன்மூலம் பெருமளவான இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.வர்த்த தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் க.பூரணச் சந்திரன் தெரிவித்தார்.

மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள யாழ். ஞானம் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. இதில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் தற்போது சிறிய கைத்தொழில்களில் இருந்து படிப்படியாக நடுத்தர, பாரிய கைத்தொழில்களுக்கு முன்னேறியுள்ளோம்.

நாட்டில் நடைபெற்ற 30 வருடகால யுத்தம் அபிவிருத்தியினை மழுங்கடித்திருந்தது. தற்போது யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் எம்மவர்களிடம் முதலிடுவதற்கு நிதியில்லை. எனினும் அமெரிக்காவின் மூலம் ஆயிரத்து 600 மில்லியன் ரூபாய் நிதி கிடைத்துள்ளது.

இத்தொகையை இங்குள்ள முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளித்து தொழிற்சாலைகளை அமைப்பதே எமது நீண்டகால அடிப்படையிலான நோக்கமாகும்.

எனினும் இங்குள்ள சில அரச அதிகாரிகள் இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முட்டுக்கட்டையாகவுள்ளனர். அரச அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகளினால் முதலீட்டாளர்களின் பணம் பறிபோக வாய்ப்புள்ளதோடு தேங்கியும் உள்ளது.

சிறிய முதலீட்டாளர்களுக்கு எதிர்வரும் வாரத்தில் 20 பேருக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வரை வழங்கவுள்ளோம். இதேபோன்று சிறிய, நடுத்தர, பாரிய முதலீட்டாளர் களுக்கும் [illegible] நிரந்தரமற்ற [illegible] களுக்கும் கடன் தொகைகள் பல நிறுவனங்களிடமிருந்து எமது நிறுவனத்தினூடாக வழங்கப்படவுள்ளன.

தற்போதுகூட பிரித்தானியா எம்மிடம் மாதாந்தம் ஒரு ஹெண்டயினர் நல்லெண்ணெய் கேட்கின்றனர். இதனை அண்மையில் வந்த பிரிட்டன் தூதுவர் கேட்டுள்ளார்.

எனினும் இவ்வளவு நல்லெண்ணெய் வழங்குவதற்கு யாரும் முன்வருவதில்லை. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான ஏற்றுமதியினை செய்ய விரும்புவோர் எம்மிடம் தொடர்பு கொண்டால் அதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

எமது பிரதேசத்தில் எமது மன்றத்தின் ஊடாக தேசிய பாடசாலைகள், பாலகர்களுக்கான பாடசாலைகள், பாரிய கைத்தொழில் நிறுவனங்கள் என்பன அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.நாம் [illegible] பொருளாதார ரீதியில் [illegible]ோம். இதற்கு அரச அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்றார். (அ-4)

# புதிய கட்டடத்திற்குள்ளும் மழைநீர் உட்புகும் அவலம்

(கரவெட்டி)

நெல்லியடி பொதுச்சந்தை (மரக்கறிச் சந்தை) நேற்றையதினம் பெய்த கடும்மழையினால் வெள்ள நீரில் மூழ்கியதாக சந்தை வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு சொந்தமான இச்சந்தை தொகுதி அண்மையில் புனரமைக்கப்பட்டு மரக்கறி வியாபாரிகளுக்கென தனியிடம் வழங்கப்பட்டது.

நேற்று காலை பெய்த கடும் மழையின் காரணமாக சந்தைக் கட்டடத்தின் மேற்கூரையினூடாக விற்பனைப் பொருட்களுக்குள் (அரிசி, மா, சீனி) மழை நீர் உட்புகுந்துள்ளது. இதனால் சந்தை வியாபாரிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். எனவே, பிரதேச சபையினர் இவற்றை கருத்திற் கொண்டு மேற்படி சந்தைக் கட்டடத்தை புனரமைத்து சீர்செய்து தருமாறு சந்தை வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் பெருமைகளை அறிந்தால் தன்னம்பிக்கை அதிகரிக்கும்

## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் தெரிவிப்பு



(சென்னை)

தமிழின் பெருமைகளை மாணவர்கள் அறிந்து கொண்டால் அவர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும் என்று வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

கல்வியின் விழுமியங்களை மேம்படுத்துவது குறித்த நிகழ்ச்சி சென்னை கீழ்ப்பாக்கம் பவன்ஸ் ராஜாஜி வித்யாஷ்ரம் பள்ளியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அவர் உரை நிகழ்த்துகையில், கல்வி ஒருவருடைய சுய மரியாதையை வளர்க்கிறது.வாழ்வில் முன்னேற்றத்தையும் ஒழுக்கத்தையும் வழங்குகிறது.கற்பித்தல் என்பது கடவுளை வழிபடுவது போன்றது. இதனை ஆசிரியர்கள் சேவையாக செய்ய வேண்டும். ஒரு முழுமையான மனிதனை உருவாக்கும் புனிதமான இடம் பாடசாலையும் கல்லூரியும் தான். வெறும் தகவல்களை மட்டும் மாணவர்களுக்கு வழங்காமல் அவர்களின் திறமைகளை வளர்க்க வேண்டும்.

புத்தகத்தில் இருப்பதைத் தவிர பல விடயங்களை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். தமிழ் மொழி : ஜப்பானிய மொழியில் தமிழ் சொற்க ளின் தாக்கம் அதிகம் உள்ளது. இதேபோல, தென் அமெரிக்க நாடான பெருவுக்கு சுமார் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திராவிடர்கள் சென்றுள்ளனர் என்பது போன்ற தகவல்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தெரிவிக்க வேண்டும். இதனால் மாணவர்களுக்கு மொழியின் மீதான மதிப்பு அதிகரிக்கும். மொழியின் மீதான மதிப்பு அதிகரித்தால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இதன் மூலம், அவர்கள் சொந்தக்காலில் நிற்க முடியும் என்றார்.

இதேவேளை அகதிகள் முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு, இந்திய பிரஜா உரிமையை கட்டாயம் வழங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகள் 25 தொடக்கம் 30 ஆண்டுகளாக இந்தியாவில் வசிக்கின்றனர். இதன் காரணமாக இந்தியா பெருமை கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# எரிபொருள் நிலையங்கள் சீன நிறுவனங்களுக்கு?

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலையங்களை சீன நிறுவனங்களுக்கு வழங்க முயற்சிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்றோலிய வள் அமைச்சிற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஒரு தொகுதி ஏற்கனவே இந்திய நிறுவனமான இந்தியன் ஒயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எஞ்சியுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒரு தொகுதியை சீன நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சீன நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. சீன நிறுவனத்திற்கு வழங்குவது தொடர்பில் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மோ. சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்

மோட்டார் சைக்கிள்- துவிச்சக்கர வண்டி விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கரவெட்டி பிரதேச சபைக்கு முன்பாக நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. மந்திகையிலிருந்து நெல்லியடி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் அதன் முன்பாகச் சென்று கொண்டிருந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதி வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள மதிலுடன் மோதியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற பருத்தித்துறை வீதி நெல்லியடியைச் சேர்ந்த அன்ரன் யோகநாதன் அனன்ராஜ் (வயது 18) என்ற இளைஞரே படு காயமடைந்துள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் தனியார் கல்வி நிறுவனத்திற்கு சென்ற இரு மாணவர்களும் காயங்கள் எதுவுமின்றி தப்பியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிசார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-9-24)

## வளமான எதிர்காலம் உனதாக மனமுவந்து வாழ்த்துகின்றோம்



கொலின்ஸ்குமார்- காமினி அவர்களின் செல்வப் புதல்வன் விஷ்ணவன் ஐந்தாம் தர புலமைப் பரீட்சையில் 156 புள்ளிகளை பெற்று சித்தி பெற்றுள்ளார். இவர் மேலும் இறைவன் அருளால் கல்வியில் சிறக்க மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வசந்தன் அனிதா
மதிவரன் சிவரஜனி
ரவிநேஸ்வரன் வனிதா
ஞானராசா உமாசிறி
(சித்தப்பா சித்திமார்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் தரம் 5 இல் புலமைப் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கருணாநிதி எழிலரசியை வாழ்த்துகின்றோம். இவருக்கு கல்வியூட்டிய அதிபர், ஆசிரியர் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
உறவினர்கள்.


## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூரட்டாதி 1<br>உயரம்:-5'11"<br>கி.பா:-16.25<br>தொழில்:-சிவில் இன்ஜினியர்<br>B/5045 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தராடம் 1<br>உயரம்: 5'<br>கி.பா:-38.25, 12 இல் செவ்.<br>தகைமை: Bsc Q/sur<br>G/201 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவோணம் 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-12.75, 12 இல் செவ்.<br>தொழில்: இன்ஜினியர், கனடா student visa<br>B/505 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா:-23.75<br>தொழில்: B.sc, M.sc, Phd மாணவி UK<br>G/202 |
| பிறப்பு:-1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூராடம் 2<br>உயரம்:-5'4"<br>கி.பா:-8.5<br>தொழில்:-HNDA சுவிஸ்<br>B/507 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>உயரம்: 5'10"<br>கி.பா: 58, 1 இல் செவ்.<br>தொழில்:-அரசபட்டதாரி ஆசிரியை<br>G/209 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-21.5, 2 இல் செவ்.<br>தொழில்:- BBM,MBA,UK, work permit<br>B/508 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 3<br>உயரம்: 5'<br>கி.பா:- 17.75<br>தொழில்:-முன்பள்ளி ஆசிரியை<br>G/210 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

## பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



மரியசேவியர் மரிஸ்ரன்

யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று எமக்கு பெருமை தேடிந்தந்த செல்வன் மரியசேவியர் மரிஸ்ரன் அவர்களையும் இவருக்கு கல்வி புகட்டிய அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் ஞான ஒளி தனியார் கல்வி நிலைய நிறுவனத்தினரையும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அப்பா:- அந்தோனிப்பிள்ளை-மரியசேவியர்
அம்மா:- மரியசேவியர்-மேரிஸ்ரெலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்த முயற்சி

## களத்தில் இறங்கியது உலக தமிழர் பேரவை

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையை வெளிச்சத்துக்கு கொண்டு வர உலக தமிழர் பேரவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.


இந்நிலையில் உலக தமிழர் பேரவையும் அமெரிக்காவின் தமிழ் அரசியல் நடவடிக்கை சபையும் அமெரிக்காவின் 31 சட்டவாதிகளின் நடவடிக்கைகளை பாராட்டியுள்ளன.

இந்த 31 சட்டவாதிகளும் கடந்த வாரத்தில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். அதில் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைமேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து கவனத்தில் எடுக்குமாறு சட்டவாதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் கடைசியாக இடம்பெற்ற காங்கிரஸின் அமர்வின்போதே இந்தக் கடிதம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்க சட்டவாதிகள், இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் இதற்கு முன்னர் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இலங்கை தமிழர்களின் பிரச்சினையை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லும் வகையில் உலக தமிழர் பேரவையின் குழு ஒன்று வணக்கத்துக்குரிய தந்தை எஸ்.ஜே.இமானுவேலின் தலைமையில் கடந்த வாரம் தென்னாபிரிக்கா மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகளில் பல உயரதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



திசைகாட்டி (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் விசா ஆலோசனைக்காக பெறப்பட்ட ஆலோசனைக் கட்டணம் மீளக் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது. இதே நிகழ்வில் திசைகாட்டி நிறுவனத்தின் பதில் நிர்வாக இயக்குநர் சி.செல்வராசா ஆலோசனைக் கட்டணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: அலுவலகச்செய்தியாளர்)

## சிறுவர் தினவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஐங்கரன் முன்பள்ளியின் சிறுவர்தின விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராஜா தலைமையில் ஐங்கரன் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஐ.டி.எம். நிறுவன பிரதம முகாமையாளர் து.திரியம்பன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் செல்வி ரி.தர்சினி, தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் சிறுவர்தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் நடைபெறும். (அ-9-29)

# பௌத்த மதத்தைப் பரப்புவது இராணுவத்தின் நோக்கமல்ல

## யாழ். கட்டளைத்தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பௌத்த மதத்தை பரப்புவதற்கு இராணுவம் வரவில்லை. மதம் என்பது கடையில் விற்கும் பொருளல்ல என்கிறார் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க.

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக தமிழ் பௌத்த தர்ம அறநெறிப் பாடசாலை நேற்று யாழ். நாகவிகாரைக்கு முன்பாகவுள்ள மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் காரணமாக பிரிந்திருந்த நாம் தற்போது ஒன்று சேர்ந்துள்ளோம்.

இன்று (நேற்று) மிகவும் முக்கியமான நாள். தமிழ் பௌத்த அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்படுகிறது. இந்தப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்படும் தகவலும் பல விதமாக ஊடகங்களில் திரிவுபடுத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் பௌத்த மதத்தைப் பரப்புகின்றனர் என்று கூறுபவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். இங்கு நாம் வந்தது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவே. பௌத்த மதத்தைப் பரப்புவது எமது நோக்கமல்ல. மதம் என்பது கடையில் வாங்கும் பொருள் அல்ல. நினைத்தவுடன் மக்களை பௌத்த மதத்திற்கு வாங்குவதற்கு அதாவது மதம் மாற்றுவதற்கு.

இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

அண்மையில் மஹரகமவிற்கு நான் சென்று இருந்தேன். அங்குள்ள பௌத்த விகாரைக்கு பல இந்துக்கள் சென்று வழிபாட்டில் ஈடுபடுவதைக் கண்டேன். அதேபோன்று பல பௌத்தர்கள் இந்து ஆலயங்களிற்கு சென்று வழிபாட்டில் ஈடுபடுகின்றனர்.

இந்துக்கோவில்களுக்கும் பௌத்த விகாரைகளுக்கும் சென்றுவழிபாட்டில் ஈடுவடுவதில் ஒரு வித்தியாசம் உண்டு.

விகாரைக்குசெல்லும்போது ஆண்கள்மேலாடையை கழற்றத் தேவையில்லை. ஆனால் இந்துக்கோவில்களில் ஆண்கள் மேலாடைகளைக் கழற்றவேண்டும்.

மேலும் பௌத்த மதப்போதனைகளை இந்துக்கள் மதம் சார்ந்த தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பம். அவர்களை மதம் மாற்றுவதல்ல எமது நோக்கம்.

கதிர்காமத்தில் இருப்பதும் முருகன்தான். நல்லூரில் இருப்பதும் முருகன்தான். நாம் எல்லா மதத்தையும் மதிக்கிறோம். வழிபடுகிறோம்.

இன, மத, மொழி வேறுபாடு இன்றி அனைவரும் இந்தநாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பம். இந்துக்களை பௌத்தர்களாக மாற்றுவதும் இங்கு பௌத்த மதத்தை பரப்புவதும் எமது நோக்கமல்ல. ஊடகங்கள் தமது வியாபாரத்திற்காக செய்திகளைத் திரிவுபடுத்தி மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்துகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# ஆஸி.செல்ல முற்பட்ட 36 பேர் கைதாகினர்


படகுமூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 36 பேர் கிழக்கு கடற்பரப்பில் சுமார் 20 கடல் மைல் தொலைவில் வைத்து நேற்றையதினம் அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஏ.பி.ஜ. என்ற படகு மூலம் அவுஸ்திரேலியா பயணிக்க முயன்ற இவர்களில் 28 தமிழர்கள், 7 சிங்களவர்களுடன் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவதாக கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இவர்களில் 3 பெண்களும் 8 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வாழைச்சேனை, கற்பிட்டி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்கள் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக இரகசிய பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் பேச்சாளர் மேலும் கூறினார். (அ-2)




சிகரம் கல்வி- தொழில் வழிகாட்டல் பிரிவால் நடத்தப்பட்ட தமிழ்மொழியிலான கல்வி- தொழில் வழிகாட்டி விபரக்கொத்து வெளியீடு, சர்வதேச கல்விக் கண்காட்சி, ஹோட்டல் பயிற்சிநெறி தொடர்பான விளக்கக் கருத்தரங்கு என்பன அண்மையில் யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது சிகரம் கல்வி வழிகாட்டி விபரக்கொத்தை தொகுப்பதில் ஆலோசகராக [illegible] தம்பி வெளியிட்டு வைக்க, வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் பெற்றுக்[illegible] விளக்கமளிக்கப்படுவதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலக செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வாழ்க்கைச் செலவு 21 ஆயிரத்து 52 ரூபாவால் உயர்வு

## தொ. ச. மத்திய நிலையத்தின் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் வாழ்க்கை செலவுப்புள்ளி 21 ஆயிரத்து 52 ரூபாவால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

நாட்டின் 4 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கான வாழ்க்கை செலவு 21 ஆயிரத்தால் உயர்ந்துள்ள போது 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை அரச ஊழியர்களுக்கு 7 ஆயிரத்து 609 ரூபா 50 சத சம்பள அதிகரிப்பே வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று 13 ஆயிரத்து 444 ரூபா 50 சதம் என்ற பணத்தின் அடிப்படையிலேயே கஷ்டப்பட்டு வாழ்க்கையை நடத்தி செல்கின்றது.

இந்த நிலையில் அரச ஊழியர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்க அரசாங்கம் முன்வராவிட்டால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களை தவிர்க்க முடியாது என்றார். (அ-2)

# தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் கல்வீச்சு

(கொழும்பு)

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை வீரர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் காலை 800 படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இந்திய- இலங்கை கடல் எல்லையில் அவர்கள் மாலை நேரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் 3 ரோந்து கப்பல்களில் அங்கு வந்துள்ளனர்.

மீனவர்களை அங்கிருந்து செல்லும்படி கூறி கருங்கற்களை சரமாரியாக மீனவர்கள் மீது வீசி எறிந்ததுடன் மீனவர்களின் வலைகளை அறுத்து கடலில் வீசிவிட்டு கடற்படையினர் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கடற்படையினரின் தாக்குதலிலிருந்து மீண்டு மீனவர்கள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். இத்தாக்குதலால் 10 படகுகளின் உரிமையாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-2)

# உலக நாடுகளுக்கு இலங்கை முன்னுதாரணம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த இலங்கை உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மிகவும் சவால்மிக்க உலக பொருளாதாரத்தில் இலங்கை 8 வீத பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. கீழ்க்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

எந்தவொரு நாடும் தனித்து செயற்பட முடியாது. நாடுகளின் அபிவிருத்தியில் சர்வதேச சமூகத்திற்கு பங்களிப்பு உள்ளது.

இது தொடர்பில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். 67 ஆம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (அ-2)

# சட்டவிரோத கொலைக்கு துணைபோனது இலங்கை

## ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

திருட்டுத்தனமாக மிதிவண்டிகளை அனுப்புவதற்கு சீனாவுக்கு உதவியதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

சீனத் தயாரிப்பு மிதிவண்டிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 48.5 வீத தீர்வை மற்றும் வரிகளை விதித்து வருகின்றது.

இந்த வரிகளில் இருந்து தப்பிக் கொள்வதற்காக சீனா இலங்கையைப் பயன்படுத்தி வந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து மிதிவண்டிகளை ஏற்றுமதி செய்வது போன்று காட்டி சீனா திருட்டுத்தனமாக தமது மிதிவண்டிகளை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனுப்பி வந்தது.

இலங்கையின் துணையுடன் இடம்பெற்றுள்ள இந்த மோசடியை ஐரோப்பிய ஒன்றியம் கண்டறிந்துள்ளதை அடுத்தே இலங்கை அரசுக்கு முறைப்படி கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரசெல்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் தூதுவரிடம் ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக பணிப்பாளர் இந்தக் கண்டனத்தை கையளித்துள்ளார்.

எனினும் இதற்கு இலங்கை அரசிடம் இருந்து இன்னமும் எந்தப் பதிலும் வரவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி பேனாட் சவேஜ் தெரிவித்துள்ளார். (அ-2)

# 2012.10 01 இன்றைய நாளின்

## முன்னைய பதிவுகள்

★ 1787-சுவோரொவ் தலைமையில் ரஷ்யர்கள் கின்பேர்ன் என்ற இடத்தில் துருக்கியரைத் தோற்கடித்தனர்.

★ 1788-நியூவென் ஹியூ வியட்நாமின் மன்னராகத் தன்னை அறிவித்தார்.

★ 1795-பிரான்ஸ் பெல்ஜியத்தைப் பிடித்தது.

★ 1799-புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டபொம்மன் கைது செய்யப்பட்டான்.

★ 1800-ஸ்பெயின் லூசியானாவை பிரான்சிடம் தந்தது.

★ 1814-நெப்போலியனின் தோல்வியை அடுத்து ஐரோப்பாவின் புதிய அரசியல் வரைப்படத்தை வரைவதற்காக வியென்னா காங்கிரஸ் கூடியது.

★ 1827-இவான் பஸ்க்கேவிச் தலைமையில் ரஷ்ய இராணுவம் ஆர்மேனியாவின் தலைநகர் யெரெவானைப் பிடித்தது.

★ 1843-நியூஸ் ஒஃப் த வேர்ல்ட் பத்திரிகை லண்டனில் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது.

★ 1854-இந்திய அஞ்சல்துறை ஏற்படுத்தப்பட்டது.

★ 1869-உலகின் முதல் தபால் அட்டை ஆஸ்திரியாவில் வெளியிடப்பட்டது.

★ 1880-இந்தியாவுடனான காசுக்கட்டளை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1880-முதலாவது மின் விளக்கு தொழிற்சாலையை தோமஸ் எடிசன் ஆரம்பித்தார்.

★ 1887-பிரித்தானியரினால் பலுசிஸ்தான் கைப்பற்றப்பட்டது.

★ 1892-இலங்கையில் இந்திய இரண்டு அணா நாணயம் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. பதிலாக வெள்ளி நாணயம் அறிமுகமானது.

★ 1895-பிரெஞ்சுப் படைகள் மடகஸ்காரின் அண்டனனாரிவோ நகரைக் கைப்பற்றினர்.

★ 1898-ரஷ்யாவின் முக்கிய நகரங்களிலிருந்து யூதர்கள் இரண்டாம் நிக்கலஸ் மன்னனால் வெளியேற்றப்பட்டனர்.

★ 1910-லொஸ் ஏஞ்சலீஸ் டைம்ஸ் கட்டடம் பெரும் குண்டுவெடிப்பினால் தகர்க்கப்பட்டது. இதில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1918-முதலாம் உலகப் போர்: அரபுப் படைகள் சிரியாவின் டமாஸ்கஸ் நகரைக் கைப்பற்றினர்.

★ 1931-ஜோர்ஜ் வோஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: நேப்பில்ஸ் கூட்டுப் படைகளிடம் வீழ்ந்தது.

★ 1949-மாசே துங்கினால் மக்கள் சீனக் குடியரசு அறிவிக்கப்பட்டது.

★ 1953-ஆந்திரா மாநிலம் உருவாக்கப்பட்டது.

★ 1960-சைப்பிரஸ் மற்றும் நைஜீரியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றன.

★ 1961-கிழக்கு மற்றும் மேற்கு கமரூன் ஒன்றுபட்டு கமரூன் சமஷ்டிக் குடியரசு ஆகியது.

★ 1965-இந்தோனேசியாவில் நிகழ்ந்த கம்யூனிசப் புரட்சி ஜெனரல் சுகார்ட்டோவினால் முறியடிக்கப்பட்டது.

★ 1969-கொன்கோர்ட் விமானம் முதற் தடவையாக ஒலியின் வேகத்தை மீறியது.

★ 1971-வால்ட் டிஸ்னி உலகம் புளோரிடாவில் அமைக்கப்பட்டது.

★ 1975-சிஷெல்ஸ் சுயாட்சியைப் பெற்றது. எலீஸ் தீவுகள் கில்பேர்ட் தீவுகளிலிருந்து பிரிக்கப்பட்டு துவாலு என்ற பெயரைப் பெற்றது.

★ 1977-பிரேசில் காற்பந்தாட்ட வீரர் பெலே இளைப்பாறினார்.

★ 1978-துவாலு ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1979-ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயை பனாமாவுக்கு மீளளித்தது.

★ 1982-சொனி நிறுவனம் முதலாவது குறுந்தட்டு ஒலிபரப்பு சாதனத்தை (CDP-101) வெளியிட்டது.

★ 1994-பலாவு ஐ.நா.விடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 2006-பாண்டிச்சேரி மாநிலத்தின் பெயர் புதுச்சேரி என மாற்றம் பெற்றது.

### பிறப்புக்கள்

★ 1847-அன்னி பெசண்ட், பெண் விடுதலைக்குப் போராடியவர் (இ.1933)

★ 1924-ஜிம்மி கார்ட்டர், அமெரிக்காவின் 39 ஆவது குடியரசுத் தலைவர்

★ 1927-சிவாஜி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ.2001)

★ 1928-ஜூ ரோங்ஜி, சீனத் தலைவர்

★ 1932-அரங்க முருகையன், தமிழறிஞர், எழுத்தாளர் (இ.2009)

★ 1936-கே.எஸ்.சிவகுமாரன், ஈழத்து எழுத்தாளர், திறனாய்வாளர்

★ 1947-ஆரன் சீசேனோவர், நோபல் பரிசு பெற்ற இஸ்ரேலியர்

### இறப்பு

★ 2008-பூர்ணம் விஸ்வநாதன், தமிழக நாடக திரைப்பட நடிகர்

### சிறப்பு நாள்

★ உலக முதியோர் தினம்.

### சிவாஜி கணேசன்



சிவாஜி கணேசன் புகழ் பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகர். விழுப்புரம் சின்னையாப்பிள்ளை கணேசன் என்பது இவரது இயற்பெயர். இவர் பராசக்தி என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானார்.

**வாழ்க்கைக் குறிப்பு**

சிவாஜி கணேசன் சின்னையா மன்றாயர்– ராஜாமணி அம்மாள் ஆகியோருக்கு மகனாக விழுப்புரத்தில் பிறந்தார். இவர் மனைவி பெயர் கமலா. மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு. மகள்கள் சாந்தி மற்றும் தேன்மொழி.

**திரைப்பட வாழ்க்கை**

சிவாஜி கணேசன் திரையுலகுக்கு வரும் முன்னர் மேடை நாடகங்களில் நடித்து வந்தார். **சிவாஜி கண்ட இந்த ராஜ்யம்** என்ற நாடகத்தில் பேரரசர் சிவாஜியாக நடித்த கணேசனின் நடிப்புத்திறனை மெச்சிய தந்தை பெரியார் அவரை சிவாஜி கணேசன் என்று அழைத்தார். அன்றிலிருந்து அந்தப் பெயரே நிலைத்தது.

சிவாஜி கணேசன் 300 இற்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

**அரசியல் வாழ்க்கை**

1955 வரை திராவிட இயக்க அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் 1961 முதல் காங்கிரஸ் கட்சியில் இணைந்து செயற்பட்டார். 1982 இல் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் ஆனார். 1987 இல் காங்கிரஸ் கட்சியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து அதைவிட்டு விலகி தமிழக முன்னேற்ற முன்னணி என்ற புதிய கட்சியொன்றை ஆரம்பித்தார்.

**விருதுகளும் கௌரவங்களும்**

ஆபிரிக்க– ஆசியத் திரைப்பட விழாவில் (கெய்ரோ 1960) சிறந்த நடிகருக்கான விருது, பத்மஸ்ரீ விருது (1966), பத்ம பூஷன் விருது (1984), செவாலியே விருது (1994), தாதா சாகேப் பால்கே விருது (1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெனிக்பாம் முகாம் நிலப்பரப்பை பெற்றுக்கொள்ள பெரும் போட்டி

## அமைச்சர் தென்னக்கோன் தெரிவிப்பு

போரின் பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த வவுனியா மெனிக்பாம் கடந்த வாரத்தில் முழுமையாக மூடப்பட்டது. இந்த நிலையில் அங்குள்ள காணிகளை பெற்றுக் கொள்வதில் வர்த்தகர்களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இராணுவத்தினரும் ஆர்வம் காட்டுவதாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களே இந்த முகாமில் இறுதியாக தங்கியிருந்தனர்.

மெனிக்பாமில் இருந்து வெளியேற்றப்பட்டு முல்லைத்தீவின் அடர்ந்த காட்டுப்பகுதியில் விடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் அங்குள்ள காணிகளை பெற்றுக்கொள்வதில்வர்த்தகர்களும்வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இராணுவத்தினரும் ஆர்வம் காட்டுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

செட்டிகுளம் மெனிக்பாம் பிரதேசம் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவை கொண்டது. இதில் 200 ஏக்கர் பரப்பை தமது பண்ணை பாடசாலைக்காக தருமாறு இராணுவத்தினர் கோரியுள்ளனர். புவிசரிதவியல் திணைக்களமும் 40 ஏக்கர் பரப்பை கோரியுள்ளது.

இதேவேளை மெனிக்பாம் பகுதியில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த 40 குடும்பங்கள் அங்கு திரும்ப வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# எமக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு தரப்படவில்லை

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் விசனம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்ற நிலையில் தெரிவான மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்கள் திருகோணமலை செல்லவுள்ளனர்.

இன்றைய அமர்வு தொடர்பாக பேரவைச் செயலாளரினால் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் உரை, சபை தவிசாளர் மற்றும் பிரதிதெரிவு ஆகியனவே அமர்வின் நிகழ்ச்சி நிரல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மாகாணசபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து விசனம் வெளியிட்டுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொலிஸ் பாதுகாப்பு தேர்தல் முடிந்து மூன்று வாரங்கள் கடந்தும் வர்த்தமானியில் பெயர்கள் பிரகடனம் செய்யப்பட்டு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

நாங்கள் பொலிஸ் பாதுகாப்பு இன்றியே இன்றைய மாகாணசபை அமர்விற்கு செல்லவிருக்கிறோம்.

மாகாணசபை உறுப்பினர் களாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் கூட நான் உட்பட கட்சியை சேர்ந்த உறுப்பினர் கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக் கிய நிலையில் பாதுகாப்பின் நிமிர்த்தம் வேறு இடங்களில் சில நாட்கள் தங்கியிருக்க வேண் டிய நிலை கூட ஏற்பட்டது.

அப்படியிருந்தும் ஏமது பாதுகாப்பு குறித்து உரிய தரப்பு கவனம் செலுத்துவதாக இல்லை. தமிழ்த்தேசிய கூட்டமைப்பை சேர்ந்தவர்களாக இருப்பதனாலே இந்தபாகுபாடு என நாம் கருதுகிறோம்.

இதனை எமது கட்சித்தலைவர்கள் பொலிஸ் உயர்மட்டத்தின் கவனத்திற்கு அறிவித்தும் கூட இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது பற்றி சாதகமான பதில் முடிவுகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் பிரசன்னா இந்திரகுமார் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மலேரியா தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

நாட்டில் இதுவரையில் மலேரியா நோய்த்தாக்கம் நூற்றுக்கு 95 வீதமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில் முற்றுமுழுதாக இலங்கையிலிருந்து மலேரியா நோயினை விரட்டி அடிக்க முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பயணிப்பவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுவதாகவும் அவ் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் மலேரியா நோய்த்தாக்கத்திற்கு உள்ளான 20 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து பேசி பிரச்சினையை தீர்க்க வேண்டும்

## சமவுரிமைகளுக்கான அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

இன்று நாம் வாய்களை மூடிக் கொண்டிருந்தாலும் இன்னும் 15 வருடங்களில் விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் உருவாகும் என சமஉரிமைகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவம் அண்மையில் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அதில் உரையாற்றிய செயற்பாட்டாளர்கள் இதனை கூறியுள்ளனர்.

இங்கு உரையாற்றிய சம உரிமைகளுக்கான அமைப்பின் தேசிய அமைப்பாளர் ஜூட் சில்வா புள்ளே;

மக்களை இன, மத, சாதி என பிரித்து ஆட்சி செய்யும் முதலாளித்துவ தேவையை தோற்கடித்து சம உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை இங்கு வந்துள்ள பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த எதிர்பார்ப்பை கொண்டுள்ள பலர் நாட்டில் பரந்துபட்டு வாழ்கின்றனர். நாம் அவர்கள் மத்தியில் செல்ல வேண்டும். தமிழர்களுக்காக போராடும் சிங்களவர்கள், முஸ்லிம்கள்; முஸ்லிம்களுக்காக போராடும் தமிழர்கள், சிங்களவர்கள்; சிங்களவர்களுக்காக போராடும் தமிழர்கள், முஸ்லிம்கள் இருக்கும் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதே சம உரிமைகளுக்கான அமைப்பின் நோக்கம் என அவர் கூறியுள்ளார்.


இதேவேளை சமஉரிமை அமைப்பின் நிறைவேற்று குழு உறுப்பினர் கே.கிருபாகரன் உரையாற்றுகையில்,போர் முடிந்த பின்னர் சிங்களவர்கள் வெற்றி பெற்றனர். தமிழர்கள் தோல்வியடைந்தனர் என அரசாங்கம் கூறியது. அரசாங்கம் எப்படி அவ்வாறு கூறமுடியும். அனைவரும் தோற்று போய் விட்டனர் என நாம் எண்ணுகிறோம். போர் நடைபெற்ற காலத்தில் பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது என தெரிவித்தனர். தற்போது போர் முடிந்துவிட்டது ஆனால் போர் நடைபெற்ற காலத்தை விட பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

தற்போது வடக்கு கிழக்கில் தமிழர்கள் வாழும் கிராமங்களுக்கு சிங்கள பெயர்களை சூட்டுகின்றனர். விகாரைகளை அமைக்கின்றனர். நாம் முன்னர் இருந்த காலத்தில் இருந்த பெயர்கள் அந்த கிராமங்களில் இல்லை. சிங்களவர்கள் எவரும் இல்லாத கிராமங்களுக்கு சிங்கள பெயர்களை சூட்டுவதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமானால் விகாரைகளை அமைப்பதை ஏற்றுக்கொள்ளுமானால் தம்புள்ள முஸ்லிம் பள்ளிவாசல் இருப்பதை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியானால் அதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் பிரச்சினை உள்ளது. அவ்வாறு அங்கு செல்பவர்களில் 75 வீதமானவர்கள் தமிழர்கள். தற்போது போர் முடிந்துவிட்டது. சமாதானம் நிலவுகிறது என்றே கூறுகின்றனர். அப்படியானால் ஏன் அவர்கள் செல்கின்றனர்.

தற்போது இந்த பிரச்சினையை சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம் என தனித்தனியாக தீர்க்க முடியாது. அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அனைவரும் இணைந்து இந்த பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும். இப்படி பேசுவதால் என்னையும் அச்சுறுத்தக்கூடும். எனினும் நாங்கள் இதனை பேச வேண்டும். இன்று நாம் வாய்களை மூடி கொண்டிருந்தால் இந்த நிலைமை தொடரும் என்றார்.

இன்னும் 15 வருடங்களில் நாங்கள் இருக்க போவதில்ல்லை. அப்போது இருக்கும் பிள்ளைகளுக்கு விடுதலைப்புலிகள் யார் என்பது தெரியாது. போர் இருந்ததா என்பதை கூட அறிந்திருக்க மாட்டார்கள். இன்று நாம் வாய்களை மூடிக்கொண்டிருந்தால் இன்னும் 15 வருடங்களில் விடுதலைப்புலிகள் மீண்டும் உருவாகுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)





வடமராட்சி வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தம் நேற்று முன்தினம் மாலை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நடைபெற்றது இதன் போது சுவாமி தீர்த்தமாட எழுந்தருளுவதையும் சமுத்திரத்தில் அடியார்கள் தீர்த்தமாடுவதையும் படங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

57

## விஜயபாகு மன்னன்

விஜயபாகு பர்மா நாட்டுடன் வர்த்தக உறவுகளை வைத்திருந்தா னெனத் தெரிகின்றது. அவன் பெறுமதியான திரவியங்களை வர்த்தகக்





விஜயபாகு மன்னனின் அரண்மனைச் சிதைவுகள்

குழுவிடம் அளித்து, ராமன்னா (பர்மா) நாட்டிற்கு அனுப்பி, அங்கிருந்து துணிவகைகள், கற்பூரம், சந்தனக்கட்டைகள் இன்னும் பல அரிய பொருட்களையும் காவிக் கொண்டு வணிகக் கப்பல்கள் உருகுணை மீண்டன. அவற்றினைப் போர் வீரர்களுக்கு வழங்கி, தன் படைவலிமையை அதிகரித்துக் கொண்டான். பின்னர், தனது அரசிருக்கையை கஜரகமத்திலிருந்து தம்பலகமம் (அப்பாந்தோட்டை அருகே) என்ற இடத்திற்கு மாற்றிக் கொண்டான்.


இராஜரட்டையில் சோழராட்சிக்கு எதிராகக் கலகங்கள் ஏற்பட்டன. இராஜரட்டை மக்கள் தாம் செலுத்த வேண்டிய வரிகளை ஒருவர் பின் ஒருவராகச் செலுத்தாது விட்டனர். அவர்களுடன் சில அதிகாரிகளும் இணைந்து கொண்டனர். அதனால் கோபமுற்ற சோழ மன்னன் (வீரராஜேந்திரன்) தென்னிந்தியாவிலிருந்து படையொன்றினைத் தனது சேனாதிபதியின் தலைமையில் அனுப்பி வைத்தான். அப்படை மகாதீர்த்தத்தில் வந்திறங்கியது. இப்படை மக்களை ஈவிரக்கமின்றி கொன்று அழித்து, இராரட்டைக்கலகத்தை அடக்கியது. அதன் பின்னர் சோழ படையானது விஜயபாகுவை அடக்கும் நோக்குடன் உருகுணைக்கு விரைந்தது. உருகுணையின் சேனாதிபதியான ரவிதேவா என்பவனும் கலா என்பவனும் விஜயபாகுவிற்கு எதிராக, தமிழ்ப் படைத் தளபதியிடம் சேர்ந்து கொண்டனர். அவர்கள் சரணடைந்ததும் சோழத்தளபதி, இனி இலகுவில் உருகுணை பிடிபட்டுவிடுமென நினைத்துக் கொண்டான். தனது இக்கட்டான நிலையை உணர்ந்த விஜயபாகு, தனது படையுடன் பல்லுத்த பர்வதத்தில் (பலாட்டுப்பாலன) தனது அரணை அமைத்துக்கொண்டான். சோழர்படை இந்த அரணைச் சூழ்ந்து கொண்டதால், பெரும்போர் இரண்டு சைனியங்களுக்கும் மூண்டது. விஜயபாகுவின் படைவீரர்கள் சோழர் படையைச் சிதறடித்தனர். அதனால் சோழர்படை பின்வாங்கி ஓடநேர்ந்தது. அதனைத் தொடர்ந்து விஜயபாகுவின் வீரர்கள், சோழப் படைத் தளபதியின் சிரசினைக் கொய்து, மன்னனிடம் எடுத்து வந்தனர். அத்தோடு சோழரின் ஆயுதங்கள், யானைகள், குதிரைகள், தேர்கள் என்பவற்றையும் கைப்பற்றி எடுத்து வந்தனர். "மன்னனே இதுவே சரியான தருணம். நாம் இப்போதே புலத்தி நகரைத்தாக்கிச் சோழரை துரத்திப் பிடிக்க வேண்டும்" என்றனர் என்கிறது சூளவம்சம்.

விஜயபாகு பெரும் படையுடன் புலந்தி நகரை நோக்கி முன்னேறுவதையும், சோழரின் உருகுணைத் தோல்வியும் சோழ மன்னன் வீரராஜேந்திரனுக்கு

அதனைக் கேட்ட சோழ மன்னன், பெரும் தொகையில் சேனை ஒன்றினை உடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். விஜயபாகு, சோழர் படையை அனுராதபுரத்திற்கு அருகில் சந்தித்தான். பெரும் சமர் மூண்டது. அதில் விஜயபாகுவின் படைவீரர்கள் ஏராளமானோர் பலியாகினர். அதனால் விஜயபாகு, புலத்தி நகரைக் கைவிட்டு வில்லிகபான என்றவிடத்திற்குத் தன் படையோடு நகர்ந்து, அங்கு ஆட்சி செய்த இரு அதிகாரிகளை அழித்து விட்டுத் தங்கினான். சோழர்களை வெற்றி கொள்ள ஏற்ற தருணத்தை எதிர்பார்த்து வட்டகிரி என்றவிடத்தில் பாசறை அமைத்துத் தங்கினான். முன்னைய படையெடுப்புகளால் ஏற்பட்ட தோல்விகளை மனதிற் கொண்டு தமிழருக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளைத் திட்டமிட்டான்.

விஜயபாகுவின் சோழருக்கு எதிரான இரண்டு போர்கள் பின்வருமாறு அமைந்தன. முதலாவது படையெடுப்பில் சோழரிடமிருந்து பொலநறுவையை மீட்டுக்கொண்டான். ஆனால், சோழர் மீண்டும் பொலநறுவையைக் கைப்பற்றிக் கொண்டனர். கி.பி 1072 இல் விஜயபாகு இலங்கையின் சோழ இராணுவ மையங்களை ஒரே நேரத்தில் தாக்கி இலங்கையை மீட்டெடுத்தான்.

இரண்டாவது படையெடுப்பில் விஜயபாகு தன் சேனாவீரர்களைத் திட்டமிட்ட பாதைகளில் அரசியல் சாணக்கியத்துடன் நகர்த்தியுள்ளான் எனத் தெரிகின்றது. முதலில், உருகுணையின் மகாநாகுல என்றவிடத்தில் விஜயபாகு தன் பெரும் சைனியத்தை ஒன்று சேர்த்தான். அங்கிருந்து அவனது படைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து வடபுறமாகச் சென்றன. ஒரு படை மாயரட்டை வழியாக அனுராதபுரம் நோக்கிச் சென்றது. இன்னொரு படைப்பிரிவு மகாநாககுலவிலிருந்து மஹியங்கணை ஊடாகப் பொலநறுவை நோக்கிச் சென்றது. மூன்றாவது படைப்பிரிவு கிழக்குக் கரையோரமாகப் பொலநறுவை நோக்கிச் சென்றது. அனுராதபுரத்தினை நோக்கி நகர்ந்த படையில் ஒருபகுதி இந்தியாவிலிருந்து சோழருக்குப் படையுதவிகள் கிடையாது தடுக்கும் விதமாக மாந்தையில் நிறுத்தப்பட்டது. இவ்வாறு படை வியூகம் அமைத்து இலங்கையைச் சோழரிடமிருந்து முதலாம் விஜயபாகு மீட்டெடுத்துக் கொண்டான். 53 ஆண்டுகள் சோழரின் ஆதிக்கத்தின் கீழிருந்த இலங்கையை விஜயபாகு மீட்டு, 1072 இல் பொலநறுவையில் முடிசூடிக் கொண்டான். பொலநறுவைக்குச் சோழரிட்ட பெயரான ஜனநாதமங்கலம் என்ற பெயரை




விஜயபாகுமன்னனின் படை நகர்வு

மாற்றி விஜயராஜபுரம் எனப் பெயரிட்டு அழைத்தான்.

முன்னைய போரில் வீரமரணடைந்த கேசமதாதுவின் இளைய சகோதரன், தனது தமையனின் மரணத்திற்குப் பழிவாங்கும் நோக்கு


கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

டன் பெரும் படையொன்றினைத் திரட்டி குட்டசாலா பிரதேசத்தில் விஜயபாகுவுக்கு எதிராகக் கிளர்ச்சியாளனாக மாறினான். அதனைக் கேள்விப்பட்ட விஜயபாகு, ஒரு சேனையுடன் சென்று மக்குத்தலம் என்னுமிடத்தில் பாசறை அமைத்து, கிளர்ச்சியாளனை வென்று துரத்தி விட்டான். துரத்தப்பட்ட கிளர்ச்சியாளன் தனது மனைவி, பிள்ளைகளுடன் சோழரிடம் சென்று அடைக்கலம் புகுந்தான். அதன்பின்னர் தம்பலகமம் நகரத்திற்குத் திரும்பிய விஜயபாகு தகுந்தவாறு திட்டங்களை வகுத்தான். தனது சேனாவீரர்களை சில பிரிவினாக்கி, ஒவ்வொரு சேனாதிபதி தலைமையில் ஒரு படையை தக்கிண தேசத்திற்கூடாக அனுராதபுரத்திற்கு அனுப்பி அங்குள்ள சோழப்படையைத் துவம்சம் செய்யுமாறும், மற்றப்படையை மகாகங்கைக் கரையோரமாகப் புலத்தி நகருக்கு அனுப்பிச் சோழர் படையைத் துவம்சம் செய்யுமாறும் பணித்தான். இருபடைகளும் பணித்தவாறு முன்னேறின. அனுராதபுரம் வந்த விஜயபாகுவின் படை அவர்களைத் துரத்தியடித்தது. இறுதியில் எஞ்சிய சோழ வீரர்களை மகாதீர்த்தம் நோக்கி ஓடவைத்தது. இறுதியில் விஜயபாகு அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான்ள.



விஜயபாகு மன்னன் அமைத்த கௌடுல அணைக்கட்டு





விஜயபாகு மன்னன் காலத்து நாணயக்குற்றிகள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணத்தின் அதிகாரங்களை குறைக்கும் சட்டமூலங்களை மு.கா. ஆதரிக்கக்கூடாது

## மனோ கணேசன் அறிவுரை

(கொழும்பு)

**கிழக்கில் தமிழ் முஸ்லிம் கூட்டாட்சி ஏற்படவில்லை என்பது எமக்கு ஏமாற்றம்தான். ஆனால், அது நடந்து முடிந்துவிட்டது. எனவே, அதை வைத்துக்கொண்டு தொடர்ந்து தமிழர்களும் முஸ்லிம்களும் முரண்படக்கூடாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முரண்பாடு முடிவுக்கு வரவேண்டும். இதன் அடையாளமாக 13 ஆம் திருத்தத்தின்படி மாகாணசபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள எந்தவொரு அதிகாரத்தையும் வெட்டி குறைப்பதற்கும் மீளப்பெறுவதற்கும் மத்திய அரசு செய்யும் எந்தவொரு கபட முயற்சிக்கும் கொள்கை அடிப்படையில். முஸ்லிம் காங்கிரஸ் உடன்படக்கூடாது.

தேசிய அரசியல் தீர்வில் முஸ்லிம் மக்களுக்கும் நியாயமான பங்கு இருக்க வேண்டும் என்பது மிகவும் நியாயமான நிலைப்பாடு ஆகும். அரசியல் தீர்வு என்பது அதிகார பரவலாக்கலை அடிப்படையாக கொண்டது.

எனவே, முஸ்லிம் மக்களுக்கும் அரசியல் தீர்வை கோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், திவிநெகும உட்பட மாகாணசபைகளின் அதிகாரங்களை வெட்டிக்குறைக்கும் எந்தவொரு சட்டமூலங்களுக்கும் மாகாணசபையில் ஆதரவளிக்கக் கூடாது. இந்த குறைந்தபட்ச நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் அறிவிக்க வேண்டும்.

கிழக்கில் அரசுக்கு ஆதரவு அளித்தாலும் 13 ஆம் திருத்தம் என்பதற்கு மேலே செல்ல வேண்டுமே தவிர கீழே போக முடியாது என்ற அதிகாரப் பரவலாக்கல் கொள்கையை தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற முறையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடிக்கிறது என நான் நம்புகிறேன்.

13 ஆம் திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் சட்டத்தில் உள்ளன. காணி, பொலிஸ் விடயங்கள் இவற்றில் முதலிடங்களை வகிக்கின்றன. இந்த விடயங்களை 13 ஆம் திருத்தத்திலிருந்து அகற்றிவிட அரசாங்கம் புதிய அரசியலமைப்பு திருத்தங்களை கொண்டு வருவதற்கு முயற்சி எடுப்பது எமக்கு தெரியும்.

வட மாகாணசபை தேர்தல் நடைபெற்று அங்கு புதிய மாகாணசபை உருவாவதற்கு முன்னர் இந்த நோக்கங்களை நிறைவேற்ற இவர்கள் முயல்கிறார்கள். இது தொடர்பில் பாராளுமன்றத்தில் புதிய 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்படுமானால் அதை முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை அடிப்படையில் எதிர்க்க வேண்டும்.

அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வந்து 13 ஆம் திருத்தத்தை அகற்றினால் அது சர்வதேச மட்டத்தில் அரசுக்கு சிக்கலை ஏற்படுத்தும். அதனால் அந்த பெரிய வேலைக்கு உடனடியாக செல்வதற்கு முன்னர் அரசாங்கம் கபடத்தனமான சில வேலைகளை செய்கிறது. 13 ஆம் திருத்தம் அப்படியே இருக்க மாகாணசபை அதிகாரங்களில் தலையிடும் பல்வேறு சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் அரசு சமர்ப்பிக்கின்றது.

அதனால்தான் மாகாணசபை அதிகாரங்களில் இந்த சட்டமூலங்கள் தலையிடுமானால் அவற்றை அனைத்து மாகாணசபைகளிலும் சமர்ப்பித்து ஒப்புதல் பெறும்படி உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. இந்த அடிப்படையிலேயே தற்போது திவிநெகும சட்டமூலம் கிழக்கு உட்பட அனைத்து மாகாணசபைகளுக்கும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரசியல் தீர்வு என்பது அதிகார பரவலாக்கலை அடிப்படையாக கொண்டது. எனவே, முஸ்லிம் மக்களுக்கும் அரசியல் தீர்வை கோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், திவிநெகும உட்பட மாகாணசபைகளின் அதிகாரங்களை வெட்டிக்குறைக்கும் எந்தவொரு சட்டமூலங்களுக்கும் மாகாணசபையில் ஆதரவு அளிக்கக்கூடாது.

இந்த கொள்கைரீதியான நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துக்கும் நாட்டு மக்களுக்கும் உடனடியாக தெரிவிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (அ-2)

# பேராசிரியர்களுக்கே இந்த நிலை என்றால் பொதுமக்களுக்கு?

## ஐ.தே.கவின் முன்னாள் உயர்கல்வி அமைச்சர் கேள்வி

எவருக்கேனும் தடிமன் ஏற்பட்டாலும் அதனை அரசாங்கம் சர்வதேச அழுத்தமாகவே கருதுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பேராசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் பொதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்களின் போராட்டத்திற்கே இந்த நிலைமை என்றால் சாதாரண மக்களை அரசாங்கம் எவ்வாறு நடத்தும் என்பது நினைத்துப் பார்க்க முடியவில்லை.

கல்வித்துறைக்காக மொத்த தேசிய உற்பத்தியில் ஆறு வீதத்தை ஒதுக்குவது சிரமமானதல்ல. கல்வித்துறை பிரச்சினைக்கு அமைச்சர்களை மாற்றுவதன் மூலம் தீர்வு காண முடியாது.

நாட்டின் எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்திற் கொண்டு அரசாங்கம் கல்வித்துறை பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்றார். (அ-2)



யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயிபாபாவுக்கு சீரடி சாயி மந்திரினால் அண்மையில் தேர்த்திருவிழா நடத்தப்பட்டது. இதன்போது தேர் வீதியுலா வருவதை படத்தில் காணலாம். (படம்:- அலுவலகச் செய்தியாளர்)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 50 பில்லியன் ரூபாய்கள் நட்டம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தானம் இந்த ஆண்டின் 7 மாத காலப்பகுதியில் 50 பில்லியன் ரூபாய்கள் நட்டமடைந்ததாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

எனினும் கடந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்துக்கு 90 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த நட்டங்கள், மின்சார உற்பத்தி, குறைந்த விலைக்கு எரிபொருளை விற்பனை செய்தல் போன்றவற்றால் ஏற்பட்டது என்று கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நிலை தொடருமானால் அரசாங்கம் பெற்றோலியத்துறையில் பாரிய நட்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பில் ஏற்பட்டுள்ள சிரமங்களும் இந்த நட்டங்களுக்கு காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

நட்டங்களை சமாளிப்பதற்காக எதிர்வரும் காலங்களில் எரிபொருள் விலையேற்றத்தை தவிர்க்க முடியாதிருக்கும் என்று இலங்கை பெற்றோலிய தரப்புக்கள் தெரிவித்துள்ளதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தாக்கப்பட்ட இராணுவ மேஜருக்கு அடுத்தவாரம் தீர்ப்பு வழங்கப்படும்

## இராணுவ ஊடகப்பிரிவு தகவல்

(கொழும்பு)

கொழும்பு ஜெஹிக் ஹில்டன் விடுதியின் வாகன தரிப்பிடத்தில் தாக்குதலுக்கு உள்ளான இராணுவப் புலனாய்வு பிரிவின் மேஜர் தொடர்பான இராணுவ தளபதியின் இறுதி தீர்ப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என இராணுவ ஊடகப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் ஜீ.வி.ரவிப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டிருந்த மூன்று நீதிபதிகளை கொண்ட இராணுவ நீதிமன்றத்தின் விசாரணை அறிக்கை அண்மையில் இராணுவ தளபதி ஜகத் ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் இறுதித்தீர்ப்பை வழங்கும் அதிகாரம் இராணுவத்தளபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான இராணுவ மேஜர் குற்றவாளி என தீர்மானித்து இராணுவ நீதிமன்றம் தமது ஆரம்ப விசாரணைகளை நிறைவு செய்துள்ளதாக பாதுகாப்பு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனடிப்படையில் சம்பந்தப்பட்ட இராணுவ மேஜருக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனையை பரிந்துரைக்க விசாரணை அறிக்கை இராணுவத் தளபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற நேரத்தில் இராணுவ மேஜர் தனிப்பட்ட பணியில் ஈடுபட்டிருந்ததாக இராணுவத்தின் ஆரம்ப விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அவர் இராணுவத்தில் இருந்து நீக்கப்படும் வரையான தண்டனை வழங்கப்படக்கூடும் என இராணுவ தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# சிறுவர் தினம்

(பூநகரி)

பூநகரி மட்டுவில் அ.த.க.பாடசாலையில் இன்று திங்கட்கிழமை முதலாம் திகதி சிறுவர் தினத்தையொட்டிய நிகழ்வுகள் பாடசாலை முதல்வர் சி.விசுவாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது சிறுவர் கலை நிகழ்வுகள், மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடுகள், பரிசளிப்பு நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. அன்றைய நிகழ்வுகளில் பெற்றோர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி நிர்வாகம் கேட்டுள்ளது. (நு-2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் முன்னோருக்குச் செய்யும் நன்றிக்கடன் மாளய சிராத்தம்

இந்து சமயத்தவர்கள் தமது வாழ்க்கையிற் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து பெரும் வேள்விகளாக கடமைகளாகப் பிதிர்யக்ஞம், தேவயக்ஞம், பூதயக்ஞம், மானுடயக்ஞம், பிரம்மயக்ஞம் வகுக்கப்பட்டுள்ளன.

இதில் பிதிர்யக்ஞம் முக்கிய பிரதான கடமையாகவும் சிறந்த நன்றிக் கடனாகவும் சிரத்தையுடனும் நம்பிக்கையுணர்வுடனும் நம் மூதாதையர்க்குச் செய்யும் உயர்ந்த கடமையாகவும் கொள்ளப்படுகின்றது.

வருடந்தோறும் புரட்டாதி மாத அபர பட்சம் பிரதமை முதல் அமாவாசை வரையான காலத்திற் பிதிர் தேவதைகளான எம்முன்னோர் மண்ணுலகிற்கு வந்து தத்தம் உறவுகளுடன் சஞ்சரிப்பதாகவும் அவ்வேளையில் நாம் அவர்களை அன்பாகவும் நன்றியறிதலுடனும் வரவேற்று அவர்களை மகிழ்விக்கும் போது அவர்கள் எம்மை ஆசீர்வதித்து ஏகுவார்கள். அதனால் எமக்குப் பிதிர்தோஷம் நீங்குவதுடன் எம் மூதாதையர்க்கு நன்றிக்கடன் செய்த திருப்தியையும் பெறுகின்றோம்.

பிதிர்க்கடன் செய்வதென்பது அவரவர் இயல்புக்கேற்றவாறு செய்யலாம். சிரார்த்தமாக தானதர்மங்கள் செய்து இதனைச் செய்ய முடியாதவர்கள் பிதிர்தர்ப்பணமாகிய எள்ளும் நீரும் விட்டு தர்ப் பணம் செய்து வழிபாடுகள் நடத்தலாம்.

மகா விஷ்ணுவின் உடம்பிலிருந்து ஏற்பட்ட எள்ளும் தர்ப்பைப்புல்லும் கையில் எடுத்து சூரிய பகவான் உச்சியில் நிற்கும்போது பிறர் காணாமலும் மனங்கோணாமலும் அர்ப்பணமாக எள்ளுந் தண்ணீரும் இறைக்கும்போது பிதிர் தேவதைகள் மனங் குளிர்ந்து தமது சந்ததியினர் பூவுலகில் நல்வாழ்வு பெற ஆசீர்வதித்துச் செல்வதாக நம்பப்படுகின்றது.

பரம சந்நியாசம் கொண்ட ஆதிசங்கர பகவத் மாதரே தமது தாய், தந்தையர்க்குப் பிதிர்கடன், சிரார்த்தம் செய்ததிலிருந்து சிரார்த்தம் சிரத்தையுடன் செய்ய வேண்டியதொரு கடமை என்பதை நாம் நன்குணரலாம்.

புரட்டாதி மாத அபரபட்ச பிரதமை (30.09.2012) முதல் புரட்டாதி மாத அமாவாசை வரை பதினைந்து நாட்கள் இவ்வருடம் மாளய சிரார்த்த காலமாக வகுக்கப்பட்டுள்ளது.

நீர்வை மணி

நாமும் நம் முன்னோர்களைப் போற்றும் தென்புலத்தாரான பிதிர் தேவர்களை நன்றியுணர்வுடன் எம் இயல்புக்கு ஏற்ப தர்ப்பணமாகிய எள்ளும் நீரும் இறைத்தோ அன்றி அன்ன சிரார்த்தமாகிய உணவுகளைக் கொடுத்தோ அல்லது ஹிரண்ய சிரார்த்தமான பணமூலமான தான தர்மங்கள் செய்தோ மனங் கோணாமல் வழிபாடுகள் செய்து வாழ்வில் நற்பேறுகள் அடைவோமாக.

# கூட்டமைப்புடனான பேச்சுக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது என அறிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மீளவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான களத்தை அமைத்துக் கொடுக்கும் முனைப்புக்களில் இந்தியா ஈடுபடும் என தெரிவிக்கப்படுகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று எட்டப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் நோக்கமாக அமைந்துள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் இதன்போது அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளின் போது இலங்கைக்கு ஆதரவளிப்பதாக இந்தியா உறுதியளித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# இலங்கையின் வீதி அபிவிருத்திக்காக சீனா 500 மில்லியன் டொலர் உதவி

(கொழும்பு)

இலங்கையின் வீதி அபிவிருத்திக்காக சீனா பெரிய கடனுதவித் தொகையாக 500 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

நாட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளின் பாதைகளை அமைப்பதற்கான இரண்டாம் கட்ட கடன் உதவியாக சீனா 500 மில்லியன் டொலர்களை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கவுள்ளது.

இதற்கான அனுமதி கடந்த அமைச்சரவை கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# பேராசிரியர்களின் போராட்டம் நியாயமானது - வாசுதேவ

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களினால் நடத்தப்பட்டு வரும் போராட்டம் நியாயமானது என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் நடவடிக்கைகளே பல்கலைக்கழக பேராசியரியர்கள் போராட்டங்களை முன்னெடுக்க ஏதுவாக அமைந்துள்ளது.

சம்பள உயர்விற்காக பல்கலைக்கழக பேராசிரியர்கள் நடத்தி வரும் போராட்டத்தை ஆதரிப்பதாகவும் அந்தப் போராட்டம் நியாயமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் தலையீட்டின் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றார். விரிவுரையாளர்களின் கோரிக்கைகளை பெற்று கொடுப்பதற்கு பதிலாக அவர்களுடன் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவது அல்லது போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விரிவுரையாளர்களின் பிரதானமான கோரிக்கையான ஊதிய அதிகரிப்பை வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் வழங்க முடியாது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகங்களுக்கு நிதி மானியங்களை வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை பல்கலைக் கழகங்களின் உபவேந்தர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்கலைக்கழகங்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்காக நிதியை வழங்கும் அதிகாரம் இது வரை மானியங்கள் ஆணைக் குழுவிடம் இருந்து வருகிறது. இந்த அதிகாரங்களை உபவேந்தர்களுக்கு வழங்குவதன் மூலம் பல்கலைக் கழகங்களுக்கு தேவையான வசதிகளை விரைவில் பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (அ-2)



யாழ்.செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.கிளையின் உப தலைவர் டாக்டர் தியாகராசா மங்கல விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# ஆளும் அமைச்சர்கள் சிலருக்கு எதிராக மோசடி விசாரணை?

(கொழும்பு)

ஆளும் கட்சியின் சில முக்கிய அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பதவிக் காலத்தில் சட்டவிரோதமான முறையில் சில சிரேஷ்ட அமைச்சர்கள் தங்களது சொத்துக்களை அதிகரித்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக கடந்த இரண்டு ஆண்டுகளாக இவ்வாறான பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த அமைச்சர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் ஏனைய சொத்து விபரங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, அரசியல்வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு எதிராக 250 இற்கும் மேற்பட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# கூட்டுத்தாபனங்களின் தலைவர்களால் பொதுநிதி வீண்விரயமாக்கப்படுகிறது

## மாற்றங்கள் ஏற்படுத்த அரசு கவனம்

அமைச்சரவை மாற்றத்துடன் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பொது நிதியை வீண் விரயம் செய்து வருவதாக கிடைத்துள்ள முறைப்பாடு காரணமாக அந்த பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் பணியாற்றும் தலைவர்கள் உள்ளிட்ட பிரதானிகள் பொது நிதியை வீண்விரயம் செய்து வருவது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கூட்டணி கட்சிகளின் பிரதிநிதிகள் அமைச்சர் பதவி வகிக்கும் துறைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களில் தலைவர்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அரச துறை பதவிகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என தெரிய வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைப் பொறிமுறையை நோக்கி அமெரிக்கா நகர்கிறதா...?

## இல. அரசின் அசமந்தம் காரணம்!

இலங்கையின் அரசியல்போக்கு அமெரிக்காவிற்கு திருப்தியைக் கொடுக்கவில்லை என்பதை அந்த நாட்டின் அண்மைய நகர்வுகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது. கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் முடிந்தவுடன் அமெரிக்க ராஜங்க திணைக்களத்தின் உதவிச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் கொழும்பு வந்திருந்தார். ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு மூன்று தடவைகளாவது கொழும்புக்கான பயணத்தை மேற்கொள்கின்ற ஒரு சுழற்சி முறையை அவர் கடைப்பிடித்து வருகின்றார். இம்முறை அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்திக்கவில்லை. அதற்கான தேவைகளும் அவரிடம் இருக்கவில்லை. ஜனாதிபதியிடம் அழுத்தங்களைக் கொடுப்பதற்கான குறுகிய வாய்ப்புகளேதும் இல்லையென்பதால், அந்த சந்திப்புக்கு அவர் முயற்சிக்கவில்லை. இம்முறை அவரது



பயணத்தின் அடிப்படை நோக்கம் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டம் எந்த நிலையில் உள்ளது; அதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் என்ன என்பதை அறிந்துகொள்வதுதான். இதனால், இந்த விவகாரங்களுடன் தொடர்புடைய லலித் வீரதுங்க, ஜி.எல்.பீரிஸ், நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த சமரசிங்க, கோத்தபாய ராஜபக்ச போன்றோருடன் தனது சந்திப்புக்களை சுருக்கிக் கொண்டார்.

இந்தப்பயணத்தின் முடிவில் பிளேக் தெரிவித்த கருத்துக்கள் இலங்கை தொடர்பாக அமெரிக்கா ஆழ்ந்த வெறுப்பை அல்லது அதிருப்தியை கொண்டுள்ளது என்பதை உணர்த்துவதாக இருந்தன.





நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும்; வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை விரைவாக நடத்தி முடிக்கவேண்டும்; வடக்கில் அதிகளவில் நிலைகொண்டுள்ள படையினரை குறைத்து சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு களை நிறுத்த வேண்டும் என்றெல்லாம் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த விடயங்கள் எல்லாமே அரசாங்கத்திற்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தக் கூடியவை என் பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், உள்ளக விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடக்கூடாது; கருத்து வெளியிடக்கூடாது என்பது அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாக உள்ளது. இதைவிட பொறுப்புக்கூறல் தொடர்பாக பிளேக் வெளியிட்ட இன்னொரு கருத்து மிகவும் ஆழமானது. போர் முடிந்து மூன்றாண்டுகள் நிறைவடைந்த நிலையில் போரின் போதான மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுத்திருக்க முடியும் என்று அவர் கூறியிருந்தார். பொறுப்புக் கூறுவதற்கு போதிய அவகாசம் இருந்தும் அரசாங்கம் அதை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் ஏமாற்றமும் அமெரிக்கத்தரப்பில் உள்ளதை அது வெளிப்படுத்தியது.

இவரது இந்தக் கருத்து வெளியான தன் பின்னணியில் வாசிங்டனில் இன்னொரு காரியமும் நடந்தேறியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஏழு உறுப்பினர்கள் கடந்த 7 ஆம் திகதி சபையில் ஒரு திருத்தப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளனர். ஏற்கனவே, அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த வலியுறுத்தும் தீர்மானத்தில், திருத்தத்தைக் கொண்டுவரவே இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க, சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட இலங்கை அரசுக்குப் பாதகமானதெனக் கருதப் படும் பல விடயங்களை இந்தத் திருத்தப் பிரேரணை கொண்டுள்ளது. நவம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து பூகோள கால மீளாய்வு நடக்கப்போகும் நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிபுணர் குழுவின் கொழும்பு பயணச் சூழலில் திடீரென அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்தத் திருத்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

இதிலிருந்தும் பிளேக்கின் கருத்தில் இருந்தும், அமெரிக்காவின் நகர்வுகள் இலங்கைக்குச் சாதகமான திசையில் செல்லவில்லை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. பிளேக் தனது பயணத்தின் முடிவில் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறும் பொறுப்புகள், ஜெனீவாவில் எதிரொலிக்கும் என்று சாரப்பட எச்சரித்து விட்டுப் போயுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத் தீர்மானத்தைத் தோற்கடிக்க, இலங்கை அரசாங்கமும் தனது பங்கிற்கு முயற்சி செய்வதாகத் தகவல். இலங்கை அரசுக்கு ஆதரவான அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இந்தத் திருத்தப் பிரேரணையைத் தோற்கடிக்கும் முயற்சிகளில் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய ஈடுபட்டுள்ளார். இது எந்தளவுக்குப் பயனளிக்கும் என்பது தெரியவில்லை. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரப்போகின்ற நிலையில் இலங்கை தொடர்பான விவகாரங்களைக் கையாளும் பிளேக் இந்தப் பதவியில் இருந்து விடுவிக்கப் படுவார் என்றும் தெரிகிறது. இதனால், இலங்கை தொடர்பான அமெரிக்க நிலைப்பாடுகள் எவ்வாறு மாற்றமடையும் என்ற கேள்வியும் இருக்கிறது. இருந்தபோதிலும் இலங்கை தொடர்பான இறுக்கமான போக்கு ஒன்று அமெரிக்க அதிகார மட்டத்தில் உருவாகி வருகிறது.

கொழும்பில் புதிதாகப் பொறுப் பேற்றுள்ள அமெரிக்கத் தூதுவர் கடும்போக்குள்ள, அனுபவமிக்க இராஜதந்திரியாக இருப்பது இந்தக் கருத்துக்குவலுச் சேர்க்கிறது. புதிய தூதுவராகப் பொறுப்பேற்ற மைக்கல் ஜே சிசன் ஏற்கனவே இலங்கை போன்ற உள்நாட்டு மோதல்களால் பாதிக்கப் பட்ட பல நாடுகளில் தூதுவராகப் பணியாற்றியவர். அதைவிட சென்னையிலும் துணைத் தூதுவராகப் பணியாற்றியுள்ளதால் தமிழர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளக்கூடியவர். மதிப்புக் கொடுக்கக்கூடியவராக இருப்பார். அதனால்தான் அவர் கொழும்பில் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்ட சில நாட்களிலேயே யாழ்ப்பாணத்திற்கு வந்து இரண்டு நாட்கள் தங்கியிருந்து நிலைமைகளை நேரில் ஆய்வு செய்தார்.

அமெரிக்கத்தூதுவர் ஒருவர் பொறுப்பேற்றதும் யாழ்ப்பாணத்திற்கு இத்தகைய பயணத்தை மேற்கொண்டது இதுவே முதல்முறை. இப்போதெல்லாம் யாழ்பபாணத்திற்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் படையெடுப்பது வழக்கமாகிவிட்டது.

விடுதலைப்புலிகளின் காலத்துக்குப்பின்னர் கொழும்புக்கு அடுத்த, முக்கியமான இராஜதந்திர மையமாக யாழ்ப்பாணம் மாறியுள்ளதை எவரும் மறுக்கமுடியாது. அந்த வகையில் புதிய அமெரிக்கத்தூதுவரின் யாழ்ப்பாணப் பயணத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ளமுடியாது. அமெரிக்கா பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்தபோதும் இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காணவில்லை என்று அவர் யாழ். ஆயரிடம் குறைபட்டுக் கொண்டுள்ளார். இதை அமெரிக்காவின் ஏமாற்றம் வெளிப்பட்டுள்ள மற்றொரு சந்தர்ப்பமாகக் கருதலாம். போர் முடிந்து மூன்று ஆண்டுகளுக்குள் செய்திருக்கக் கூடியவற்றை இலங்கை செய்யத்தவறிவிட்டது என்ற அமெரிக்காவின் கருத்து ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் பூகோள கால மீளாய்வின்போது இலங்கை அரசாங்கம் எதிர் கொள்ளப்போகும் நெருக்கடிக்கானதொரு முன்னறிவிப்பாகவே தெரிகிறது.

பிளேக் அதை வெளிப்படையாகவே கூறியும் உள்ளார். முன்னதாக அமெரிக்கா போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேசப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்க வில்லை. ஆனால், இப்போது அதை நோக்கி மெல்ல நகரத் தொடங்கியுள்ளது போலுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்த பிரேரணையையும் சரி, இலங்கை அரசாங்கம் இதுவரை செய்யவில்லை என்ற பிளேக்கின் கருத்தையும் சரி, சர்வதேச விசாரணைப் பொறிமுறையை நோக்கி அமெரிக்கா நகர்வதற்கான அறிகுறியாகக் கருதலாம். இது இலங்கை அரசாங்கத்துக்கு ஒருபோதும் இனிப்பான செய்தியாக இருக்க முடியாது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய போர்க்குற்றங்கள் குறித்து விசாரித்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அர்சாங்கம் கேட்கும் கால அவகாசம் மிகவும் நீளமானது. அதைவிட இராணுவ நீதி மன்றங்கள் அவசரமாக அமைக்கப்பட்டபோதும் அவை என்ன செய்தன; என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பதும் வெளிச்சத்துக்கு வரவில்லை. இப்படியான அசமந்தப்போக்குத்தான் அமெரிக்காவின் இந்த முடிவுக்குக் காரணமாக இருக்கக்கூடும். அதே வேளை மாகாணசபைத்தேர்தல்களின் மூலம் சர்வதேச அழுத்தங் களிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என்று இலங்கை அரசாங்கம் கணக்குப் போட்டிருந்தது. ஆனால், அமெரிக்காவின் இத்தகைய நகர்வுகள் அரசாங்கத்தின் அந்தக்கணிப்பை பொய்யாக்கிவிட்டுள்ளது போலவே தெரிகிறது.

தொல்காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க பிரஜைகளை உருவாக்க அடித்தளமிடுவோம்

## இன்று சர்வதேச சிறுவர் தினம்

இன்றைய சிறார்களே எதிர்காலத்தின் தலைவர்கள். எனவே, எதிர்கால உலகு எவ்வாறு அமைய வேண்டும் என எதிர்பார்க்கும் அனைவரும் இன்றைய சிறார்களுக்கு அத்தகைய திறன்களையும் தேர்ச்சிகளையும் வழங்க முழு ஆளுமைமிக்க பிரஜையாக உருவாவதற்கு அடித்தளமிடப்பட வேண்டும்.

இன்றைய நாளில் நாம் அனைவரும் சிறுவர்களை உலகின் சொத்துக்களாக கருதி அவர்களின் விருப்பு, வெறுப்பு திறன்களைக் கண்டு அதற்கேற்ப நேர்மனப்பாங்குடன் அவர்களை அணுகி அவர்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிக்கொண்டு வர சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

உலக சிறுவர்தினம் கொண்டாடுவதற்கான காரணம் 1ஆம் ,2 ஆம் உலக மகா யுத்தத்தின் போது இறந்தவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்களே. அதுமட்டுமன்றி ஜப்பானில் கிரோசிமா, நாகசாஜி பிரதேசங்கள் மீது வீசப்பட்ட அணுகுண்டு மூலம் பிற்காலத்தில் பிறந்த பிள்ளைகளில் பெரும்பாலானோர் அங்கவீனமுடைவர்களாகப் பிறந்தனர்.

இதன் காரணமாகவே சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. இன்றைய உலகம் எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாக சிறுவர் துஷ்பிரயோகங்களும் சிறுவர்களுக்கெதிரான அநீதிகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இப்பிரச்சினைகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளைவிட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலேயே அதிகம்.

சிறுவர் துஷ்பிரயோகத்தின் பல்வேறுபடிவங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

உடல்ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ் பிரயோகம், புறக்கணிப்பு ரீதியான துஷ்பி ரயோகம்.

இலங்கையில் நாளாந்தம் நடைபெறும் வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் பற்றி ஆய்வு செய்த யுனிசெப் நிறுவனம் இலங்கை பிள்ளைகளில் 14 தொடக்கம் 16 சதவீதத்துக்கு இடைப்பட்டோர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதாக குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு உடல் ரீதியான, மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகத்தின் வீதம் மிக உயர்வாக உள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

உடல் சார்ந்த துஷ்பிரயோகம் என்பது யாதேனும் வகையில் வலிமையான நிலையில் இருக்கும் ஒருவர் அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் வேண்டுமென்றே பிள்ளைகளுக்கு காயம் விளைவித்தல் அல்லது காயம் விளைவிக்கப் போவதாக அச்சுறுத்தலே உடல் சார்ந்த துஷ்பிரயோகமாகும்.

பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் என்பது வளர்ந்தவர் ஒருவரால் அல்லது கூடிய வலிமையுடைய ஒருவரால் பிள்ளையொன்று பாலியல் காரணங்களுக்காக பயன்படுத்தப்படுதலாகும். இது தொடுகையுடனோ தொடுகை அற்ற வகையிலோ நிகழ இடமுண்டு.

மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகம் மூலம் பிள்ளையின் சுயமதிப்பு மீண்டும் தாக்கப்படும். அது பிள்ளையின் சுயஉணர்வை நசுக்கிவிடக் கூடியதாக பல்வேறு வழிகளில் இடம்பெறும். குறிப்பாக உலகில் உள்ள அனைத்த சிறுவர்களும் இவ்வாறான துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுத்து வருகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகங்களை நீக்கி சிறுவர்கள் சுதந்திரமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு உலகில் பல அரசுகள், அரச சார்பற்ற நிறுவணங்கள், சமூக மற்றும் சமய நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. இவற்றுள் உலக சிறுவர்களின் நலனுக்காக இயங்கும் நிறுவனம் யுனிசெப் ஆகும்.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதில் இலங்கை 12.07.1991 அன்று அங்கத்துவ நாடாக இணைந்து கொண்டது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 54 உறுப்புரைகளை கொண்டது. அவற்றுள் 40 உறுப்புரைகள் சிறுவர்கள் பற்றியும் ஏனையவை நடைமுறைப்படுத்தப்படலுடனும் தொடர்புடையது. முதலாவது உறுப்புரையானது 18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்கள் என்றும் அவர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறுகின்றது.

சிறுவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக உலகளாவிய ரீதியில் 1979 முதல் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது.

கல்வி உளவியலாளர்கள், கல்வி தத்துவவியலாளர்களின் கருத்துப்படி பிள்ளை வாழும் சூழல் பிள்ளையின் வளர்ச்சி விருத்தியில் பெரிதும் செல்வாக்கு செலுத்துவதாக கூறியுள்ளார். அந்த வகையிலே

- கேலிக்கு உட்படும் குழந்தை வெறுக்க கற்றுக்கொள்கின்றது.
- சமாதான சூழ்நிலையில் வளராத குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்கிறது.
- விமர்சனங்களுக்கிடையே வளரும் குழந்தை வெட்கப்படக் கற்றுக் கொள்கின்றது.
- அவமானத்திடையே வளரும் குழந்தை குற்ற மனப்பான்மையுடன் வளரக் கற்றுக் கொள்கின்றது.
- சகிப்புத்தன்மையுடன் வளரும் குழந்தை பொறுமையுடன் வாழக்கற்றுக் கொள்கின்றது.
- ஊக்குவிக்கப்படும் குழந்தை தன்னம்பிக்கையுடன் வாழக் கற்றுக் கொள்கின்றது.
- புகழ்ச்சியிடையே வளரும் குழந்தை பிறரை பாராட்டக் கற்றுக் கொள்கின்றது.
- நேர்மையான சூழலில் வாழும் குழந்தை நீதி நியாயங்களை கற்றுக் கொள்கின்றது.
- பாதுகாப்பான சூழ்நிலையில் வளரும் குழந்தை நேர்மையாக வாழக் கற்றுக் கொள்கின்றது.

த.சிவகுமார்
விரிவுரையாளர்,
விசேட கல்வித்துறை,
யாழ்.தேசிய கல்வியியற்
கல்லூரி.

- விரும்பி ஏற்றுக் கொள்ளப்படும் குழந்தை தன்னையே விரும்பக் கற்றுக் கொள்கின்றது.
- எதையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் நட்பு இதனிடையே வளரும் குழந்தை இவ்வுலகில் அன்பைத் தேடக்கற்றுக் கொள்கின் றது.

குழந்தைகள் எமது நாட்டின் சொத் துக்கள். நாம் அனைவரும் அவர்களை பேணிப் பாதுகாப்போம். அறிவுப் பொருளாதாரத்திலே அவர்களை ஒளிபெறச் செய்வோம். ❋ ❋ ❋

# சிறுவர்களுக்காக குரல் கொடுப்போம்...

இன்றைய நவீன உலகில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி நிலையில் மாற்றங்களால் மாறிவரும் சிறுவர்களின் வாழ்வியலில் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களை எதிர்கால சிந்தனை சிகரங்களாக வளப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும். சிறுவர் நலன் பேணும் அமைப்புக்கள் சிறுவர் உரிமைக்காக உலகளாவிய ரீதியில் குரல் கொடுத்து வருகின்றன.

காலம்காலமாக இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்கின்ற மரபினை இன்றைய நிலையினை சிறுவர்கள் உருவாக்கியுள்ளனர்.

எம்முடைய மூதாதையர் காலத்தில் வாழ்ந்த அன்றைய சிறுவர்கள் நிலை நாட்டாத சாதனைகளை இன்றைய சிறுவர்கள் நிலை நாட்டி தலைவராக தகுதி உள்ளது என நிரூபித்து உள்ளார்கள்.

### சிறுவர்தினம்

சிறுவர்கள்நலமாக வாழவும்சிறுவர்கள்தமக்குரிய உரிமைகள் எவை என தெரிந்து கொள்ளவும் இன்றைய கால உலக சிறுவர்தினம் வழி வகுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு ஏற்ப ஒவ்வொராண்டும் ஒக்டோபர் முதலாம் திகதி உலகளாவிய ரீதியில் சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது.

சிறுவர்கள் உரிமைகள் தொடர்பாக முதன் முதலில் 1959 ஆம் ஆண்டு கொள்கையொன்று வெளியிடப்பட்டது. அதன் பின்னர் 1959 இல் ஐக்கிய நாடுகள் சபையால் 1924 ஆம் ஆண்டின் கொள்கையை அடியொட்டி சிறுவர் உரிமைகள் தொடர்பான தெளிவான கொள்கை ஒன்று வெளியிடப்பட்டது. சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் 1969 இல் சிறுவர் பற்றிய கொள்கையை அங்கீகரித்தது.

இன்று இலங்கை உட்பட சர்வதேச ரீதியில் பல சவால்களுக்கு மத்தியில் சிறுவர் உரிமைக்காகவும் அவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பாலியல் சார்ந்த துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாக்கவும் பல்வேறுபட்ட அமைப்புக்கள் குரல் கொடுப்பதற்காக நிறுவப்பட்டு குரல் கொடுத்தும் வந்தன. ஆனால் இன்று எம் யாழ். வாழும் சிறுவர்கள் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது.

பல்வேறுபட்ட சிறுவர் அமைப்புக்கள் திட்ட செயற்பாடுகளை ஒரு வருடத்திற்கு முந்திய நிலையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் சிறுவர் உரிமைக்காக குரல் கொடுத்ததோடு சிறுவர் நலனில் அதிக அக்கறை கொண்டு அவர்களது கல்வி, பாதுகாப்பிலும் கண்ணும் கருத்துமாக இருந்த வேளையில் சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்கள் பாதுகாக்கப்பட்டனர்.

இன்று அவ்அமைப்புக்கள் திட்ட செயற்பாடுகள் முடித்துக் கொண்டு வெளியேறிய நிலையில் சிறுவர் துஷ்பிரயோகம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

பாலியல் வன்முறை சார்ந்த துஷ்பிரயோகங்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் கடந்த மாதத்தில் சற்று அதிகமாக நடந்தேறியுள்ளது மிகவும் வேதனைப்படக்,கூடிய விடயமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு நடைபெற்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் பெரியோர்களால் மட்டுமின்றி சிறுவர்களால் சிறுவர்களை துன்பநிலைக்கு ஆளாக்கிய சம்பவங்களும் உள்ளன. இப்பிரச்சினையிலிருந்து சிறுவர்களை விடுவித்துக்கொள்ள நிறுவனங்களால் மட்டும் செயற்படுத்தி விட முடியாது. சிறுவர்களது பாதுகாப்பினை உறுதி செய்யவென அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட கிராமமட்ட சிறுவர் பாதுகாப்பு குழுக்களானது மிகவும் கரிசனையுடன் செயற்படும் பட்சத்தில்தான் ஒரு வளமான தலைமைத்துவம் நிறைந்த சமுதாயத்தினை கட்டியெழுப்பலாம்.

மாதம் ஒருமுறை சிறுவர் அமைப்பாக ஒன்று கூடி சிறுவர் பிரச்சினை பற்றிக் கதைக்கப்பட்டு பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க் கப்படும் பட்சத்தில் சிறுவர்கள் நலமாக வாழ வழியமைக்க முடியும்.

சிறுவர்கள் வாழும் காலத்தில் சிறுவர்களாகவே வாழ விடுதல் என்பதற்கான சூழல் உருவாக்கப்படாமல் இருக்குமாயின் அவ்வேளையில்தான் சிறுவர் உரிமை மறுப்பு செய்தவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதும் துஷ்பிரயோகம் செய்பவர்களை தண்டிப்பதும் மாத்திரம் சிறுவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக அமைந்து விட முடியாது. இவற்றில் எல்லாம் சிக்காமல் இருப்பதற்கான மாற்று வாய்ப்புக்களை சிறுவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

### சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படல்

சிறுவர்களை வேலையில் அமர்த்துதல் தொடர்பான பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கிறது. ஆயினும் உலகு, எமது நாடு, எமது சமூகம், குடும்பம் என்ற அடிப்படையில் வாழும் அனைத்து சிறுவர்களும் பாதுகாக்கப்பட வேண்டியவர்களே. எனவே சிறுவர்களுக்கு எதிராக எழுகின்ற வன்முறைகள் உடனடியாக நிவர்த்தி செய்கின்ற வழிமுறைகளை அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதனை நிவர்த்தி செய்வதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பளித்து நல்லதொரு எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பை சமூகத்தலைவர்கள், பொதுஅமைப்புகள் ஏற்றுக் கொண்டு செயற்படுத்துவதன் மூலம் எதிர்கால உலகை சிறப்பானதாக மாற்றலாம்.

சிறுவர்களுக்கென அரசாங்கம் சிறுவர் உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. சிறுவர்கள் தமது பெற்றோரிடமிருந்து அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொள்வதற்கும் தம்மை எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பதற்கும் பாதுகாப்பினை பெறுவதற்கும் அவர்கள் தம்மை உயர்த்துவத ற்கும் தமது பங்களிப்பினை செய்வதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் கல்வி கற்க வேண்டிய கட்டாய சூழ்நிலையிலும் சிறுவர்கள் கல்வியை இடைநிறுத்தி வேலைக்கு செல்வதோடு கட்டாயப்படுத்தி வேலையில் அமர்த்தப்படுகின்றனர். பெற்றோர்கள் தமது வறுமை நிலையினை போக்கிக்கொள்வதற்கு பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள். சில முதலாளி வர்க்கத்தினர் அடாவடித்தனமாக சிறுவர்களை வேலைக்கமர்த்தி குறைந்த ஊதியத்தை கொடுத்து சுரண்டிப்பிழைக்கின்றனர்.

சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்காக விசேட வேலைத்திட்டத்தின் மூலமாக 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சிறுவர் தொழிலுக்கெதிராக 2002/2003 ஆம் ஆண்டுகளின் செயற்பாடுகள் எனும் தலைப்பில் ஜெனீவா நகரில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டவாறு உலகெங்கிலும் வாழும் 5 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட 246 மில்லியன் அளவான சிறுவர் தொழிலாளர் எனக் கணிக்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

அத்தொகையினரில் மில்லியன் அளவான சிறுவர்கள் மிகவும் அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர் தொழிலாளர்கள் 127.3 மில்லியனராகவும் ஆபிரிக்க பிராந்தியத்தில் 48.0 மில்லியனாகவும் அமெரிக்க கரிபிரியன் பிராந்தியத்தில் 17.4 மில் லியனாகவும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர் தொழிலாளர் தொடர்பான உலக நிலை இவ்வாறு இருப்பினும் இல்ங்கையில் அடிமை வியாபாரமோ ஒப்பந்த அடிப்படையிலோ சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை. இந்த நிலையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்பது சிறுவர்களின் சுதந்திர வாழ்வை மறுப்பதுடன் அவர்களுக்கே உரித்தான உரிமைகளை மீறுதல் என்பது மட்டுமல்லாது அவர்களின் எதிர்கால வாழ்வை சீரழித்தும் விடுகின்றனர். எனவே சிறுவர் தமக்குரிய உயரிய நலன்களை பெற்று வாழ அனைவரும் குரல் கொடுப்போம். ❋ ❋ ❋

அமிர்தலிங்கம் அகன்
கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

236

## மக்கள் தலைவன்




மிகப் பழைய காலத்தில் *வீரபாகன்* என்ற மன்னன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரு மனைவிகள். மூத்தவள் பெயர் *துளசி*. இளையவள் பெயர் *ரூபவதி*. மூத்தவளுக்கு ஒரு மகன். அவன் பெயர் *ரகுபதி*. இளையவளுக்கும் ஒரே மகன். அவன் பெயர் *பசுபதி*. அரசன் வீரபாகன் தனது இளைய மனைவிமீதே மிகுந்த அன்பு செலுத்தினான். அவள் எதைச் சொன்னாலும் தட்டவேமாட்டான். அவள் சொல்வதே அவனுக்கு வேதம்.

துளசியை இளையவள் ரூபவதி பல வகையிலும் கொடுமைப் படுத்தி வந்தாள். இருப்பினும் துளசி பொறுமை காத்தாள். அரசனுக்குப் பின்பு தனது மகனான பசுபதிக்கே ஆட்சிப் பொறுப்பைத் தரவேண்டும் என்று ரூபவதி அரசன் வீரபாகனிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டாள். அத்துடன் துளசியைப் பற்றித்தினமும் அவதூறுகளை அள்ளிவீசி அவனது மனதை மாற்றினாள்.

இவ்வாறு செய்தே துளசியையும் ரகுபதியையும் ரூபவதி அரண்மனையைவிட்டே விரட்டியடித்து விட்டாள். துளசியும் ரகுபதியும் தனியாக ஒரு வீட்டில் வசித்து வந்தனர்.

ரகுபதிக்கு ஆறு வயதானது. தனது தந்தை யார் என்று அன்னையிடம் ஓயாமல் கேட்டான். துளசி மன்னன் வீரபாகனே அவனது தந்தை என்று கூறினாள். தனது தந்தையைக் காணவேண்டும் என்று ரகுபதி அடம்பிடித்தான். அதனால் ஒரு வேலைக்காரனுடன் தன் மகனை துளசி அரண்மனைக்கு அனுப்பிவைத்தாள்.

அரண்மனை வாயிலுக்குச் சென்ற சிறுவன் ரகுபதி வேலைக்காரனை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் உள்ளே நுழைந்தான். அரசன் இருக்கும் அறைக்குள் ரகுபதி சென்றான். மகனைக் கண்ட மன்னன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வாரி அணைத்துக் கொஞ்சினான். தனது அருகில் ஆசனத்தில் மகனை அமரச் செய்தான். அந்த வேளையில் இளைய மனைவி ரூபவதி அந்த அறைக்குள் நுழைந்துவிட்டாள். அவள் அரசனும் மகன் ரகுபதியும் ஆசனங்களில் இருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தாள். தனக்குத் தந்த வாக்குறுதியைக்கூறி கடுமையாக எச்சரித்தாள். சிறுவனை விரட்டியடித்தாள். அரசன் வாயே திறக்கவில்லை.



சிறுவன் ரகுபதியின் மனம் மிகவும் வேதனையடைந்தது. நடந்தவை அனைத்தையும் தனது அன்னையிடம் தெரிவித்தான். அதனைக் கேட்டு துளசி கண்ணீர் விட்டு அழுது புலம்பினாள். தாய்படும் துயரத்தை சிறுவன் ரகுபதியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவளுடைய கவலையைப் போக்கும் வழியென்ன என்று சிந்தித்தான்.

சிலநாட்கள் கடந்தன. ஒருநாள் ரகுபதி தனது அன்னையிடம் அம்மா என் தந்தையைவிடவும் மேலானவர்கள் எவரேனும் உலகத்தில் உண்டா என்று கேட்டான்.


எல்லோருக்கும் மேலானவர் பகவான்தான். அவர்தான் உலகிலுள்ள அனைவருடைய துயரங்களையும் துடைப்பவர். ஆனால் அவர் எங்கேயிருக்கிறார் என்பதுதான் தெரியவில்லை. அவரை யாரும் கண்ணால் கண்டதில்லை என்று கூறினாள்.

இறைவன் எங்கேயிருந்தாலும் அவரைத் தேடிக்கண்டுபிடிப்பேன் என்று ரகுபதி உறுதி கொண்டான். அன்று இரவு அவனுக்கு உறக்கமே வரவில்லை. அன்னை அயர்ந்து தூங்கும் போது நள்ளிரவில் மெதுவாக எழுந்து சப்தமில்லாமல் வீட்டைவிட்டு வெளியேறினான்.

இரவெல்லாம் நடந்து வெகுதூரம் வந்துவிட்டான். வழியில் சந்திப்போர் சிறுவன் என்று இரக்கப்பட்டுத் தருவதை உண்டு தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தான். இரவு வந்தால் வழியில் எங்காவது படுத்துத் தூங்கி விடுவான். எப்படியேனும் கடவுளைக் கண்டுவிட வேண்டும் என்ற மனவுறுதி கொண்டு பயணச் சிரமங்களையெல்லாம் மறந்துவிட்டு நடந்துகொண்டேயிருந்தான்.

அரசனான தனது தந்தையிலும் மேலான ஒருவரை மனதில் கற்பனை செய்து பார்த்தான். அப்படி எவரும் ரகுபதியின் பார்வையில் படவேயில்லை. பல நகரங்களைக் கடந்து சென்றான். பலமாதங்கள் பயணம் செய்த பின்பும் ஆண்டவன் தரிசனம் அவனுக்குக் கிடைக்கவேயில்லை. மிகவும் களைத்துப் போன ரகுபதி ஒருநாள் ஒரு மரத்தடியில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்தான். அப்போது பகவானே நேரில் வந்து நானே பகவான் என்று கூறும்வரை கண்களைத் திறப்பதேயில்லை என்று உறுதிகொண்டான்.

இவ்வாறு மனவுறுதியுடன் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருந்த ரகுபதியைக் கண்ட பலரும்



பாலயோகி என்று கருதி பால், பழம், உணவு அளித்து வணங்கிச் சென்றனர். சிறுவன் ஒருவன் மிகுந்த வைராக்கியமுடன் கண்களை மூடி அமர்ந்திருப்பதையறிந்த தேவலோகத்தவரும் அங்கே வந்து சிறுவனிடம் கண்களைத் திறக்குமாறு வேண்டினர்.

ஆனால் எவர் கூறியும் கண்களைத் திறக்க ரகுபதி மறுத்து விட்டான். தாங்கள் தேவலோகத்தவர்கள் என்று கூறியும் மறுத்து விட்டான். இவ்வாறு ஆண்டுக்கணக்கில் சிறுவன் கண்களை மூடிக்கொண்டு அதேயிடத்தில் பிடிவாதமாக அமர்ந்திருந்தான். இத்தனை ஆண்டுகளில் அவன் சூரிய ஒளியைப் பார்க்கவேயில்லை. மனவுறுதி மட்டும் தளரவேயில்லை.

ஒருநாள் யாரோ ஒருவர் சிறுவன் அருகில் வந்து நான்தான் கடவுள் கண்களைத் திற என்று கூறினார். ரகுபதி அளவற்ற மகிழ்ச்சியுடன் கண்களைத் திறந்து பார்த்தான். ஒரு சாதாரண மனிதன் தனது எதிரில் நிற்பதைக் கண்டான்.

அந்த மனிதர் ரகுபதியைப் பார்த்து குழந்தாய் நீ மனிதர்களிலும் கடவுளைக்காணமுடியும். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைத்து எவன் பாடுபடுகிறானோ அவனிடத்தில் இறைவன் இருக்கிறான் என்று கூறினார். உடனே ரகுபதி எழுந்து சென்று அன்று முதல் ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டான். நற்பணிகள் பல செய்தான். பல ஆண்டுகள் தொண்டுகள் புரிந்து ஏழைய எளிய மக்களிடம் ரகுபதி பேரும் புகழும் பெற்றுப் பிரபலமானான்.

இந்நிலையில் மன்னன் வீரபாகன் மிகவும் வயோதிபனாகி விட்டான். ஆட்சியைச் சரிவரக் கவனிக்கவேயில்லை. இளைய மனைவியின் மகனான பசுபதியை அரசனாக்குவது என்று முடிவு செய்தான். தான் அரசமாதா ஆகப்போவதையெண்ணி ரூபவதி எல்லையற்ற உவகையில் மிதந்தாள். இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது. இந்த முடிவை மக்கள் விரும்பவில்லை.

நாமே ஏன் ஒரு அரசரைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று சிந்திக்க ஆரம்பித்தனர். எங்கள் மீது எவரும் யாரையும் அரசராக்கத் திணிக்கக்கூடாது. எங்கள் மன்னரை நாங்களே தேர்ந்தெடுப்போம் என்ற கூக்குரல் நாடெங்கும் தீவிரமாக ஒலிக்கத் தொடங்கியது. மக்கள் இதற்காகப் போராடவும் தயாரானார்கள்.

நாட்டில் நிலைமை கடுமையாகவே மக்களின் ஒருமித்த குரலுக்கு அரசன் மட்டுமல்ல அரச மாதாவாகத் தன்னை எண்ணிக் கொண்ட ரூபவதியும் தலைவணங்க வேண்டியதாகிவிட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதே இதற்கு முடிவு என்று தீர்மானிக்கப்பட்டது.

தேர்தலில் ரகுபதியும் பசுபதியும் போட்டியிட்டனர். மக்களில் பெரும்பாலோர் ரகுபதிக்கே வாக்களித்து வெற்றிபெற வைத்தனர். ரகுபதி ஆட்சிப் பொறுப்பை யேற்றான். துளசி அரசமாதா ஆனாள்.

மன்னன் ஆனபோதிலும் அவன் யாரையும் பழிவாங்க எண்ணவேயில்லை. ***தூய உழைப்பில்தான் ஆண்டவன் உள்ளான்*** என்பது ரகுபதிக்கு உறுதியாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. மெனிக்பாம் முகாமில் இராணுவ முகாம் அமையும்

## சுரேஸ் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா மெனிக்பாம் இடம்பெயர் முகாமில் இராணுவ முகாமொன்று அமைக்கப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இடம் பெயர்ந்த மக்கள் தற்காலிகமாக தங்குவதற்கு இந்த இடம்பெயர்ந்த முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த தற்காலிக முகாம்கள் இடிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த பிரதேசத்தில் இராணுவ முகாமொன்று அமைக்கப்படவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் இராணுவ முகாம் அமைக்க ஏற்கனவே இராணுவத்தினர் அனுமதி கோரியுள்ளதாகக் குறிப்பிட் டுள்ளார். மெனிக்பாம் முகாமிலும் முகாம் ஒன்றை அமைக்க இராணுவத்தினர் முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். வடக்கில் ஏற்கனவே இராணுவப் பிரசன்னம் உயர்வாகக் காணப்படுகின்ற நிலையில் மேலும் இராணுவத்தினரை அதிகரிக்கும் நோக்கில் இவ்வாறு மெனிக்பாம் முகாம் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனினும், இராணுவ முகாம் விஸ்தரிக் கப்படவுள்ளதா என்பது பற்றி தமக்குத் தெரி யாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மெனிக்பாம் காணிகளில் முகாம்களை அமைக்கும் திட்டம் எதுவும் கிடையாது என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப் பாளர் லக்ஸ் மன்ஹுலுகல்ல தெரிவித்துள்ளார். (அ- 2)

# குளவி தாக்கியதில் 9 பேர் வைத்தியசாலையில்

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லெதன்டி தோட்டத்தின் மால்பரோ பிரிவில் கொளு ந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளர்களை குளவி தாக்கியதில் பாதிக்கப்பட்ட 9 பெண் தொழிலாளர்கள் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. இந்த குளவி தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட 9 பெண்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல் லப்பட்டுள்ளனர். இவர்களில் இரு கர்ப்பிணி பெண்களும் உள்ளடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. தேயிலை செடிகளுக்கிடையில் காணப்பட்ட கற்பாறையின் அடியில் இருந்த இந்த குளவி கூட்டை பறவை ஒன்று உரசியதால் குளவிகள் கலைந்து தம்மை தாக்கியதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர். தற்போதைய வரட்சியான காலநிலையில் தேயிலை கொளுந்து பறிக்கும் பெண் தொழிலாளர்கள் அதிகளவில் குளவித் தாக்குத லுக்கு உட்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இதற்கமைய பாடசாலையில் சித்தி அடைந்த மாணவர்களின் விபரங்கள் அப்பாடசாலை அதிபர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு,

**யா/கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலை**

விமலதாஸ் விதுர்ஷா-162

**கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை**

பத்மநாதன் நிதர்சிகன் - 151

**கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்**

நந்தகுமார் கவிஞ்சனா - 149

**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை**

அகிலநாயகம் கோகின் - 168 (மாவட்ட மட்டத்தில் 1), கிரிதாசன் சஞ்சயன் - 146

**கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை**

சந்திரபாலா சிந்துஜன் - 158.


## வரலாற்றுச் சாதனையாளர்களை பாராட்டுகின்றோம்






ற.சுரபி (புள்ளிகள் 183) மு/மாவட்டத்தில் முதல் நிலை.

மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் இருந்து 2012 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 17 மாணவர்கள் சித்தியடைந்து வரலாற்று சாதனை படைத்துள்ளார்கள். இவர்களில் செல்வி ற.சுரபி 183 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் நிலை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரையும் ஏனைய சித்தியடைந்த மாணவர்களையும் இவர்களுக்கு கற்பித்த திரு. ப.சுதர்சன் ஆசிரியர் அவர்களையும் ஆரம்பக் கல்வி கற்பித்த ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டுவதில் பாடசாலைச் சமூகம் பெருமை அடைகின்றது.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், பாடசாலைச் சமூகத்தினர்
(மு/விசுவமடு மகா வித்தியாலயம், விசுவமடு,
முல்லைத்தீவு)

(526)






திருச்சிற்றம்பலம்
பொன்மலைக் கொடியுடன் அமர் வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில் முன் வந்தார் (பெரியபுராணம்)

## நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய தீர்த்தோற்சவ (10ம் திருவிழா) விஞ்ஞாபனம்

நிகழும் நந்தன வருடம் புரட்டாதி மாதம் 17ம் நாள் (03-10-2012) புதன்கிழமை மு.ப.10:00 மணியளவில் நாகேஸ்வரப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிடேக ஆராதனைகள் தவில் நாதஸ்வர வாத்தியங்கள் முழங்க நடைபெறும். அதனைத் தொடர்ந்து பி.ப 2:00 மணியளவில் வசந்த மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் நாகேஸ்வரப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அலங்கார பூஜை ஆராதனைகள் நடைபெற்று எம்பெருமான் உள்வீதி உலா உற்சவம் இடம்பெறும்.

### நிகழ்ச்சிகள்

மேளக்கச்சேரி

| | |
|---|---|
| அகில இலங்கை புகழ் நாதஸ்வர சக்கரவர்த்தி பி.எஸ்.பாலமுருகன் நாதஸ்வர வித்துவான் பி.எஸ்.ஜெயசிங்கம் | நாத சுடர்ஒளி தவில் வித்துவான்கள் எஸ்.முருகையா,பி.ஸ்.செந்தில்நாதன் |
| சர்வதேச புகழ் நாதஸ்வர மேதை நாதஸ்வர சக்கரவர்த்தி 25 ஆண்டு வெள்ளிவிழா நாயகன் கோண்டாவில் வி.கே.கானமூர்த்தி அவர்களின் புதல்வர் வி.வி.கே.கிருஷ்ணதாசன் இசையுலக இன்குழல் வேந்தன் நாதஸ்வர வித்துவான் ஏ.சுதந்திரன் | தவில் வித்துவான் தவில் வித்துவமணி பி.கணேசன் தவில் அரசு ஜே.கிருபாகரன் தவில் இசை மழை கே.கிருஷ்ணா |
| கலாபூசணம் நாதஸ்வர வித்துவான்- கே.ஆர்.சுந்தரமூர்த்தி நாதஸ்வர வித்துவான்- எஸ்.தேவதாஸ் | தவில் வித்துவான்கள் - எஸ்.சொர்ணலிங்கம் எஸ்.ராமதாஸ் |
| நாதஸ்வர வித்துவான் டாக்டர் பஞ்சாபிசேகன் அவர்களின் பேரப்பிள்ளைகள் சித்தார்த்தன்,பிரதிஸ்ஸன் | தவில் வித்துவான்கள் எம்.நாகேந்திரன். எஸ்.சாந்தன் |
| நாதஸ்வர வித்துவான்கள் எஸ்.இரத்தினம்,வி.பி.மயூரன். ஆர்.முருகதாஸ் | பருத்திநகர் தவில் நாத சகோதரர்கள் எம்.எஸ்.விஜயகுமார் . எம்.எஸ்.சதீஸ்குமார் எஸ்.பாலச்சந்திரன் |

### இரவு நிகழ்ச்சிகள்

மேளக்கச்சேரி 8:00 மணி தொடக்கம் 11:00 வரை இடம்பெறும்

11:00 மணி தொடக்கம் 1:00 மணி வரை
வில்லிசை
விடயம்:- தாட்ஷாயணி கல்யாணம்
வழங்குபவர்:- கருணையம்பதி கணாதிபன் வில்லிசைக் குழுவினர்
தலைமை:- ச.யோகசம்பந்தக் குருக்கள்
மிருதங்கம் :- க.செல்வமோகன்
ஆர்மோனியம்:- லோ.நிமலன்
பிற்பாட்டு:- சி.குமரவேல்- க.கவிச்செல்வன்

1:00 மணி தொடக்கம் 3:30 மணி வரை
வழக்காடு மன்றம் (பட்டிமன்றம்)
குற்றவாளிக்கூண்டில் இன்றைய சினிமாப் பாடல்கள்....
மொழிக்கலப்புக்கு வித்திட்டவை
விளங்காத சொற்களை பயன்படுத்தியமை
ஆபாசத்தை தூண்டும் பாடல்களை பாடியமை

| குற்றம் சுமத்துவோர்கள் | குற்றத்தை எதிர்ப்போர்கள் |
|---|---|
| திரு.செல்வதாஸ் | திரு.றஜீவன் |
| திரு.அரவிந்தன் | திரு.வர்ணன் |
| திரு.மணிமாறன் | திரு.றமணன் |

இரவு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அதிகாலை 3:30 மணியளவில் வசந்தமண்டப பூஜை ஆரம்பமாகி 4:00 மணியளவில் நாகேஸ்வரப் பெருமானும் பரிவார மூர்த்திகளும் விசேட மினசார தீபங்களால் அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் சமுத்திரக்கரையை நோக்கி எழுந்தருள்வார். உதயம் 6:00 மணியளவில் எம்பெருமானது தீர்த்தோற்சவ நிகழ்வு இடம்பெறும். அடியார்கள் அனைவரும் தீர்த்தோற்சவத்தில் கலந்து எம்பெருமானது திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

சிகரம்: கார்த்திகேசு -கரவெட்டி - ஒளி அலங்காரம்: இந்திரதீபம் - பருத்தித்துறை
ஒலி அமைப்பு: வாணி சவுண்ட் - பருத்தித்துறை - சாத்துப்படி என்.விஜயரட்ணம் ஐயர். அல்வாய்
பூந்தண்டிகை: பிரசன்னா - இணுவில் -மேடை அலங்காரம் திரு.சிவானந்தராசா. குடத்தனை
படப்பிடிப்பு:-நாகேஸ்வரா வீடியோ - நாகர்கோவில்

குறிப்பு:- பகல் அன்னதானம் வழங்கப்படும்

இங்ஙனம்
10ம் திருவிழா உபயகாரர்கள்

(சி/1198)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தெலுங்கானா போராட்டம்; பொலிஸார் தடியடி பிரயோகம்



(நகரி)

ஆந்திராவில் தனி தெலுங்கானா மாநிலம் கோரி போராட்ட குழுவினர் போராடி வருகிறார்கள். நேற்று ஐதராபாத்தில் மாபெரும் பேரணி நடத்தப்படும் என்று போராட்ட குழுவினர் அறிவித்து இருந்தனர்.

இந்த போராட்டத்துக்கு பொலிஸார் முதலில் அனுமதி அளிக்கவில்லை. ஆனாலும் தடையை மீறி தெலுங்கானா பேரணி நடக்கும் என்று போராட்டக்குழு அறிவித்தது.

இந்நிலையில் தெலுங்கானா பேரணிக்கு பல்வேறு கட்டுப்பாடுகளுடன் பொலிஸார் நேற்று முன்தினம் அனுமதி வழங்கினர். அதன்படி குறிப்பிட்ட வீதியில்தான் பேரணி செல்ல வேண்டும். பேரணியின் போது ஒலி பெருக்கி பயன்படுத்தக்கூடாது போன்ற கட்டுப்பாடுகள் பொலிஸாரினால் விதிக்கப்பட்டன.

இந்த பேரணிக்கு 4 இலட்சம் பேர் கலந்து கொள்வார்கள் என்று போராட்டக்குழு தலைவர் கோதண்டராம் கூறியுள்ளார். பேரணியில் வன்முறை ஏற்படலாம் என பொலிஸார் சந்தேகித்ததால் ஐதராபாத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இதற்கிடையே ஐதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் தனித் தெலுங்கானா கோரி நேற்று காலை பேரணி நடத்த முயன்றனர். ஆனால் அவர்களை கல்லூரி வாசலிலேயே பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இதனால் ஆவேசம் அடைந்த மாணவர்கள் பொலிஸார் மீது சரமாரியாக கற்களை வீசினார்கள். இதில் பல பொலிஸார் காயம் அடைந்தனர். நிலைமை கட்டுக்குள் வராததால் மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை குண்டு வீசி விரட்டினர். இதனால் மாணவர்கள் கல்லூரியின் ஏனைய வாசல் வழியாக பேரணியாக செல்ல முயன்றனர். ஆனால் கல்லூரியின் 4 வாசல்களிலும் பொலிஸ் படை குவிக்கப்பட்டது. சுவர் ஏறி குதித்து வெளியேறி வந்த மாணவர்களை அவர்கள் விரட்டியடித்தனர்.

பொலிஸாரின் தடுப்பு வேலிகளை உடைத்துக்கொண்டு முன்னேறிய மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்து தெலுங்கானா ஆதரவாளர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவர்களை விடுதலை செய்யக் கோரி முதல் மந்திரி கிரண்குமார் ரெட்டி வீடு முன்பு போராட்டம் நடத்த காங்கிரசார் திரண்டனர். இதனால் முதல் மந்திரி வீடு முன்பும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த போராட்டங்களால் ஐதராபாத்தில் பதற்றம் நிலவுகிறது. (அ-2)

## இயேசுநாதர் சிலை கேரளாவில் திறப்பு

கேரளாவில் உள்ள பொறியியல் கல்லூரி ஒன்றில் இந்தியாவிலேயே மிக உயரமான இயேசுநாதர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு என்ஜினீயரிங் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள இந்த இயேசுநாதர் சிலை 33.5 அடி உயரத்தில் வெள்ளை நிறத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

கேரளாவைச் சேர்ந்த பிரபல கலை இயக்குநரும் சிற்பியுமான பிரேமசந்திரன் என்பவர் இந்த சிலையை உருவாக்கியுள்ளார். பைபர், மெழுகு உட்பட பல்வேறு பொருட்களை கொண்டு இந்த சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை 22.5 அடி உயரபீடத்தில் நிறுவப்பட்டுள்ளது. (அ-2)

# அணு உலை போராட்டத்திற்காக சிறுத்தைகள் கட்சி துணை நிற்கும்

## திருமாவளவன் தெரிவிப்பு



(ராதாபுரம்)

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்திற்கு என்றும் துணை நிற்போம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக போராட்டக் குழுவினர் இடிந்த கரையில் தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகி ன்றனர்.


இந்த போராட்ட குழுவினரை சந்திப்பதற்காக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிறுவன தலைவர் தொல்.திருமாவளவன் நேற்று முன்தினம் மாலை இடிந்தகரைக்கு வந்தார்.

அங்கு போராட்டக்குழுவினரை சந்தித்து அடுத்த கட்ட போராட்டம் குறித்து கேட்டறிந்தார். பின்னர் அவர் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றுகையில், அணுமின் நிலையத்துக்கு எதிராக போராடி வரும் மக்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி என்றும் துணை நிற்கும். மத்திய அரசு போராட்டக்காரர்களை அடக்க நினைப்பது தவறானது.

மாறாக மக்களின் அச்சத்தை நீக்க பாதுகாப்பு குறித்து தெளிவான விளக்கம் தர வேண்டும். எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை அணுமின் நிலையத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் பங்கேற்பார்கள். அதேபோல் எதிர்வரும் 29 ஆம் திகதி சென்னை தலைமை செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நான் மற்றும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள், தொண்டர்கள் திரளாக கலந்து கொள்வோம்.டெசோ அமைப்பின் ஆலோசனை கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை சென்னையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடக்கிறது. அதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நான் கலந்து கொள்கிறேன் என அவர் கூறினார். (அ-2)

# கூடங்குள அணுமின் நிலையத்தின் அவசியத்தை விளக்கி ஆர்ப்பாட்டம்

## ஞானதேசிகன் தெரிவிப்பு



மத்திய அரசின் நிபுணர் குழுவும் மாநில அரசின் நிபுணர் குழுவும் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பானது என்று கூறிய பின்னரும் சென்னை உயர்நீதிமன்றம் அணுமின் நிலையம் தொடங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கிய பின்பும் தினம் தினம் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என கூடங்குளம் இடிந்தகரை பகுதியில் நடைபெற்று வருகின்றன. அப்பாவி மக்களை திசை திருப்பி வருகிறார்கள் என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

உச்ச நீதிமன்ற பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விசாரித்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் ஆர்ப்பாட்டங்கள் செய்வதும் அணுமின் நிலையத்தை முற்றுகையிடுவோம் என்று அறிவிப்பு செய்வதும் கண்டனத்திற்குரியது.

ஆகவே, கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அவசியத்தையும் அவசரத்தையும் உணர்த்தும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் நாளை மறுதினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவெடுத்து மாவட்டத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அவர் கூறினார். (அ-2)



அரசுமுறைப் பயணமாக கியூபா பயணித்துள்ள கபோன் நாட்டு ஜனாதிபதி அலி போங்கோ ஒண்டிம்பா தலைநகர் ஹவானாவில் ஜனாதிபதி ரவுல் கேஸ்ட்ரோவை சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# பயங்கரவாத அமைப்புக்களுக்கு பேரழிவு ஆயுதங்கள் கிடைக்கக்கூடாது

## இந்தியா கோரிக்கை

(நியூயோர்க்)

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பயங்கரவாதிகளிடம் சிக்காமல் தடுக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

அணு ஆயுத பயங்கரவாதம் என்ற தலைப்பில் நியூயோர்க்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ஹர்தீப் சிங் புரி உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பயங்கரவாதிகளிடம் சிக்காமல் தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட இந்தியா ஆதரவளிக்கிறது. இதற்காக ஐக்கிய நாடுகள் சபை இரசாயன ஆயுதத் தடுப்பு அமைப்பு, சர்வதேச அணு சக்தி முகமை ஆகிய அமைப்புக்களுக்கு இந்தியா ஒத்துழைப்பு அளித்து வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளாக பயங்கரவாதத் தாக்குதல்களை நாங்கள் எதிர்கொண்டு வருகிறோம். இந்நிலையில் பயங்கரவாத இயக்கங்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் கிடைத்தால் ஏற்படும் நிலைமை குறித்து நன்றாக அறிவோம்.

எனவே, பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழில்நுட்பங்கள் பயங்கரவாதிகள் கைப்பற்றாமல் சர்வதேச நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். அணு ஆயுதங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது அந்தந்த நாடுகளின் அரசின் பொறுப்பாகும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனிடம் அறிவு உறங்கினால் கீழான இச்சைகள் கண்விழித்து குதியாட்டம் போடும்.

~பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இதோ! அதிபர்களுக்கான சங்கீதக் கதிரைப் போட்டி!

பாடசாலைகளில் மெய்வல்லுநர் போட்டி நடைபெறும் போது ஆசிரியர்களுக்கு, பெற்றோர் களுக்கு, நடுவர்களுக்கு என போட்டிகள் நடத் தப்படுவது வழக்கம்.

ஆனால் அதிபர்களுக்கு போட்டி நடத்தப்படுவதில்லை. இந்தக் குறையை நிவர்த்திக்க அதிபர் களுக்கு சங்கீதக் கதிரைப் போட்டி நடத்தினால் எப்படியிருக்கும் என்று ஒரு கற்பனை.

இதோ! அதிபர்களுக்கான சங்கீத கதிரைப் போட்டி.

அறிவிப்பாளர்: அதிபர்களுக்கான சங்கீதக் கதிரைப்போட்டி இன்னும் ஒரு சில நிமிடங் களில் ஆரம்பமாகும். இப்போட்டிக்கு பிரதம விருந்தினர் வடக்கு மாகாண அதி உயர் அதிகாரி. சிறப்பு விருந்தினர்கள் மாகாணக்கல்வி அமைச்சின் உயரதிகாரிகள்.

நடுவர்கள்: வலயக்கல்விப் பணிப்பாளர்கள்.

அவதானிப்பாளர்கள்: பழைய மாணவர் சங்கங்கள், அபிவிருத்திச் சங்கங்கள், ஆசிரிய தொழிற் சங்கங்கள்.

பார்வையாளர்கள்: பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள்.

(வட்டமாக அடுக்கப்பட்டுள்ள சங்கீதக் கதிரைகளைச் சுற்றி அதிபர்கள் நிற்கிறார்கள்)

இதோ போட்டி! ஆரம்பமாகிறது.

இசை: தோல்வி நிலை என நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா...

பாடல் இசைக்கப்படும் போது இசை நிறுத்தப் பட்டு விட்டதாக நினைத்து சில அதிபர்கள் கதிரைகளில் அமர்கின்றனர்.

பார்வையாளர்கள்: சிரிப்பொலியுடன் கரகோஷம்.

நடுவர்கள்: இசை நிறுத்தப்படுவதற்கு முன்னதாக கதிரையில் அமர்ந்த அதிபர்களுக்கு அறிவுரை கூறி போட்டியில் பங்குபற்ற செய்கின்றனர்.

எல்லா அதிபர்களும் கதிரையைச் சுற்றி வருகின்றனர். இசை நிறுத்தப்படுகின்றது.

முண்யடித்துக்கொண்டு அதிபர்கள் கதிரையில் அமர்கின்றனர். சில அதிபர்கள் ஏற்கெனவே இருந்த அதிபரை தூக்கி எறிந்துவிட்டு அமர் கின்றனர். இன்னும் சிலர் தாம் பிடித்த கதிரை யில் இருந்து கொண்டு அதில் இருக்க வரும் அதிபர்களை எதிர்க்கின்றனர்.

அவதானிப்பாளர்கள்:

இ.த.ஆ.ச: போட்டியை திரும்பவும் வைக்க வேண்டும் இல்லையேல் அறிக்கை விடுவோம்.

இ.ஆ.ச.: நீதிமன்றம் செல்வோம்...

கோஷம் எழுந்ததும் பிரதிக்கல்விப் பணிப் பாளர்கள் ஓடிச் சென்று தொழிற்சங்கப் பிரதிநிதி களைச் சந்தித்து குழப்பாதீர்கள். போட்டியை நடத்த விடுங்கள் எனக் கேட்கின்றனர் (கோஷம் தணிகின்றது)

இசை: போனால் போகட்டும் போடா. இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா...

பாடல் இசைக்கப்படும் போது அதிபர்கள் சுற்றி வருகின்றனர். அவ்வாறு சுற்றி வரும்போது சில அதிபர்கள், அட! பிடித்த கதிரையில் இருந்திருக்கலாம் என்று நினைக்க, இன்னும் சிலர் நல்ல கதிரையில் அமர்ந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பில் கதிரைகளைப் பார்க்கின்றனர்.

இசை நிறுத்தப்படுகின்றது.

கதிரையைப் பிடிக்க முடியாதவர்கள் வெளி யேறுகின்றனர். மீண்டும் இசை.

வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும். இப்படை தோற்கின் எப்படை வெல்லும்...

இப்பாடல் இசைக்கப்படும் போது பிரதம விருந்தினர், அருகில் இருப்பவரிடம் இது என்ன பாடல் எனக் கேட்கிறார்.

ஐயா! இது சினிமாப்பாடல். சத்தியமாக சினிமாப்பாடல் தான் என்கிறார் அவர்.

போட்டி தொடர்ந்து நடைபெறுகின்றது.

அறிவிப்பாளர்: பிரதம விருந்தினர் வேறு நிகழ்வில் கலந்து கொள்ளவேண்டியுள்ளதால் இப்போது அவரின் உரை இடம்பெறும்.

பிரதம விருந்தினர்: தோற்ற அதிபர்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கான நல்ல கதிரைகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் உள்ளது.

போட்டி நன்றாக இருக்கிறது. சில அதிபர்கள் பாய்ந்து பாய்ந்து கதிரைகளைப் பிடிப்பதை பார்க்கும் போது, நாங்கள் நினைத்தது நடக்கும் என்று நம்புகின்றோம். தங்கியு.

கதிரைப் போட்டி தொடர்கிறது.

# தென்னிலங்கை முகவர்களினால் யாழ்ப்பாண வர்த்தகர்கள் நெருக்கடியில்!

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களின் முகவர்களின் அடாவடித்தனத்தால் குடாநாட்டு வர்த்தகர்கள் தற்கொலை செய்வது அதிகரித்துவருவதாகவும் இன்னும் பலர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டிற்கு ஏ9 பாதை திறந்தபின்பு தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் வியாபாரத்திற்காக இங்கு முகாமிட்டுள்ளதோடு பொருட்களை வர்த்தகர்களுக்கு இறக்குமதி செய்தும் முகவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

முன்னைய காலங்களில் வர்த்தக நடவடிக்கைகளை தாம் மிகவும் இலகுவாக முன்னெடுத்ததாகவும் தற்போது பெரும் நெருக்கடிகளை தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களில் முகவர்களினால் எதிர்கொள்வதாகவும் குடா நாட்டு வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பெரும்தொகையில் பொருட்களை வர்த்தகர்களிடம் கொடுத்துவிட்டு அதற்கான பணத்தினை செலுத்துவதற்கு போதிய கால அவகாசம் கொடுக்கின்றனர் இல்லை.

இதனால் இவ்வளவு காலமும் சிறுகச்சிறுக சேமித்த எல்லாவற்றையும் இழந்த நிலையில் கடன்தொல்லை காரணமாக தற்கொலை செய்துகொள்கின்றனர். இன்னும் பலர் தலைமறைவாகின்றனர்.

பொருட்களை இறக்குமதி செய்யும் போது போதியளவு கால அவகாசம் கொடுப்பதாகவும் வியாபார நடவடிக்கை மூலம் ஈட்டும் இலாபத்தின் ஊடாக பணத்தினைத்தந்தால் போதும் எனக் கூறிவிட்டு குறுகிய காலத்திற்குள் உடனடியாக பொருட்களிற்கான பணத்தை செலுத்த வேண்டும் என அடாவடித்தனம் செய்கின்றனர்.

இல்லையேல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வோம் எனவும் மிரட்டுகின்றனர்.

நீண்டகாலமாக குடாநாட்டில் கௌரவ வர்த்தக நடவடிக்கையில் ஈடு பட்டுவந்த எமக்கு தற்போது பெரும் நெருக்கடிகள் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களின் முகவர்களினால் ஏற்பட்டுள்ளது என குடாநாட்டு வர்த்தகர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (எ-6)

# கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்ற போதிலும் தெரிவான மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்கள் திருகோணமலை செல்லவுள்ளனர்.

இன்றைய அமர்வு தொடர்பாக பேரவைச் செயலாளரினால் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் உரை, சபை தவிசாளர் மற்றும் பிரதி தெரிவு ஆகியனவே நிகழ்ச்சி நிரல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து விசனம் வெளியிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர் பிரசன்ன இந்திரகுமார் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொலிஸ் பாதுகாப்பு தேர்தல் முடிந்து மூன்று வாரங்கள் கடந்தும் வர்த்தமானியில் பெயர்கள் பிரகடனம் செய்யப்பட்டு ஒரு வாரம் கடந்தும் இது வரை வழங்கப்படவில்லை.

நாங்கள் பொலிஸ் பாதுகாப்பு இன்றியே மாகாண சபை அமர்விற்கு செல்ல விருக்கிறோம்.

மாகாண சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கூட, நான் உட்பட கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய நிலையில் பாதுகாப்பின் நிமித்தம் வேறு இடங்களில் சில நாட்கள் தங்கியிருக்க வேண்டிய நிலை கூட ஏற்பட்டது.

அப்படியிருந்தும் எமது பாதுகாப்பு குறித்து உரிய தரப்பு கவனம் செலுத்துவதாக இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பதனோலே இந்தப் பாகுபாடு என நாம் கருது கிறோம்.

இதனை எமது கட்சித் தலைவர்கள் பொலிஸ் உயர்மட்டத்தின் கவனத்திற்கு அறிவித்தும் கூட, இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது பற்றி சாதகமான பதில் முடிபுகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் பிரசன்னா இந்திரகுமார் மேலும் குறிப்பிட்டார். (எ-11)

# பேராசிரியர்களின் போராட்டத்தின் பின்னணியில் குமார் குணரட்ணம்?

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களின் போராட்டத்தின் பின்னணியில் முன்னணி சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் இயங்கி வருவதாக பிரபல சிங்கள வார இறுதிப் பத்திரிகையொன்று பிரதான செய்தி வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் நோக்கில் ஜே.வி.பி.யும் அதிலிருந்து பிளவடைந்த தரப்பினரும் முயற்சிக்கின்றனர்.

இந்த சூழ்ச்சித் திட்டத்தை 90 வீதமான பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 11 பேரைக் கொண்ட பல்கலைக்கழக பேராசிரியர் குழுவொன்றே இந்த போராட்டத்தை முன்னெடுக்கின்றது.

தொழிற்சங்கப் போராட்டம் தோல்வியடைந்தால் முக்கிய உறுப்பினர்களுக்கு அவுஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதாக குமார் குணரட்னம் உறுதியளித்துள்ளார்.

ஜே.வி.பி.பிளவடைந்திருப்பதாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களில் உண்மையில்லை. ஜே.வி.பி.யின் இனவாத கொள்கைகளினால் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக ஜே.வி.பியிலிருந்து குழுவொன்று பிளவடைந்து முன்னணி சோசலிச கட்சியை அமைத்துள்ளதாக வெளிக் காட்டிக் கொள்ளப்படுகின்றது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பல்கலைக்கழக பேராசிரியர் போராட்டம் குமார் குணரட்னமே வழி நடத்துகின்றார் என குறித்த சிங்கள பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. (எ-11)

## வவுனியா வளாகத்துக்கு புதிய முதல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வராக கே.கே. அருள்வேல் இன்று பதவியேற்கிறார். இவர் யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறை தலைவராகவும் வணிகமாணி கற்கை நெறியின் இணைப்பாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஒருபோதும் பயம்கூடாது



உங்கள் உடல், மனம், அறிவு இம்மூன்றையும் பலவீனமாக்கும் எவையும் நஞ்சென்று ஒதுக்கி விடுங்கள். அவற்றை மனதிற்குள் திணிக்காதீர்கள்.

வஞ்சனையால் எதையும் சாதிக்கமுடியாது. அன்பாலும் உண்மையாலும் பெரிய செயலைக் கூட எளிதாகச் செய்து விடமுடியும். பரந்த உலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கும் கல்லுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்.

பயமின்மையே வாழ்வின் இரகசியம். நமக்கு என்ன நேருமோ என்று ஒருபோதும் பயப்படவேண்டாம். பிறரிடம் இருந்து வரும் உதவியை மறுக்கின்ற அந்தக்கணமே சுதந்திரம் வந்துவிடும்.

நியாயமான கோபம் என்ற ஒன்று உலகில் இல்லை. ஏனெனில் அனைத்தையும் சமமாகக் காணத் தவறுவதால் தான் கோபமே உண்டாகிறது.

எண்ணங்களுக்கு நாம் உரிமை உடையவர்கள் நல்ல எண்ணங்கள் நம்மை நோக்கி வருவதற்காக உள்ளங்களைத் திறந்து வைக்க வேண்டியது நம் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொக்குவில் இந்துவை வீழ்த்தியது சென்.ஜோன்ஸ்



கொக்குவில் இந்து கல்லூரி அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியொன்று அண் மையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி ஏ அணி 41.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டி னையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக துவாரகசீலன் 32 ஓட்டங்களையும் கௌரங்கன் 19 ஓட்டங்களையும் கனமிர்தன் 17 ஓட்டங்களையும்பெற்றனர்.

பந்து வீச்சில் கீர்த்திகன் மூன்று விக்கெட்டினையும் லிங்கநாதன்,தனு சாந்த தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

147 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 35 ஓவர்களில் அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரமே பெற்று படுதோல்வி அடைந்தது. அதிகபட்சமாக லிங்கநாதன் 16 ஓட்டங்களையும் சத்தியன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கனமிர்தன், லோகதீஸ்வர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# உதைபந்தாட்டத்தில் வல்வை சம்பியன்

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 21 வயதினருக்குக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் பொலிகண்டி விண்மீன் அணியை வெற்றி பெற்று வல்வை அணி சம்பியனாகியது.

தேசிய உதைபந்தாட்ட அணியில் 21 வயதுப் பிரிவு வீரர்களை சேர்த்துக் கொள்வதற்கான இப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திக்கம் இளைஞர் விளையா ட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் விண்மீன் அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது. இவ்விறுதி ஆட்டத்தில் வல்வை அணியின் உதயன் முதலாவது கோலையும் அதே அணியின் மயூரன் 2 ஆவது கோலையும் போட்டனர்.

இடைவேளையின் போது 0:2 எனும் கோல் கணக்கில் வல்வை அணி முன்னிலை வகித்தது. பிற்பாதி ஆட்டத்தில் அதே அணியின் சீலன் கோலொன்றைப் போட இறுதியில் 0:3 என்ற கோல் கணக்கில் விண்மீன்அணியை வெற்றி பெற்று வல்வை அணி சம்பியனாகியது.

இதில் 14 அணிகள் பங்கு பற்றியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (9-24)

# தேசிய வீரர்களை தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட உதைப்பந்தாட்ட அணிக்கு வீரர்களை தெரிவு செய்யும் போட்டிகள் தொடர்பான கூட்டம் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் 24 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா அரசாங்க அதிபர் எம். கே. பந்துல ஹரிச்சந்திர தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வவுனியாவில் நடைபெற வுள்ள வட மாகாண, மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாகவும் உதைபந்தாட்ட போட்டிகள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண் ணாத்துரை, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், விளையாட்டு பயிற்றுநர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (23)

# உதைபந்தாட்ட போட்டியில் சென். ஜோன்ஸ் வெற்றி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப் பட்ட 19 வயது பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

காலியில் நடைபெற்ற முதல் போட்டியில் கொழும்பு ரி.பி.ஜெயன் அணியும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி யும் மோதின. அப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 1:0 என்ற ரீதியில் வெற்றிபெற்றது.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் குருநாகல மாலியாவத்த கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதின. இப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 5:4 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

# மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி
# சென்.விக்டரீஸ், ஸ்டார் ஈகிள் அணிகள் வெற்றி

மன்னார் பெரியகடை ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் 10 ஓவர்கள் கொண்ட மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

36 போட்டிகளை கொண்ட போட்டியில்23 வேது போட்டி யானது சென். அன்ரனிஸ் அணிக்கும் சென்.விக்டரிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனிஸ் அணியினர் 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணிழ சார்பாக மேனன் 10 பந்துகளில் 18 ஓட்டங்களையும் ரஞ்சனோ 11 பந்களில் 15 ஓட்டங்களையும் அதிக பட்ச ஓட்டங்களாக பெற்றனர். பந்ஹவீச்சில் சென்.விக்ரிஸ் அணி சார்பாக டேமியன் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் மெர்லீன் விவேக் அஜித் செல்வராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.விக்டரிஸ் ஆகியோர் தலா ஒவ் வொரு இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.பதிலக்கு துடுப் பெடுத்தாடிய சென்.விக்டரிஸ் அணியினர் 9.2 ஓவர்களில் 4 இலக்கினை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் அஜித் பிரதீப் ஆகியோர் 12 பந்துகளில் 23 ஓட்டங்களாக பெற்றனர். பந்துவீச்சில் சென்.அன்ரனீஸ் அணி சார்பாக லஜீப் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் ரஞ்சனோ ஜோசியஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர்.

24 ஆவது போட்டியானது ஸ்டார் ஈகிள் அணிக்கம் யங் ஸ்டார் அணிக்கம் இடையில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினர் 10 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களை அதிரடியாக்கவித்தனர். துடுப்பா ட்டத்தில் ஸ்டார் ஈகிளி அணி சார்பாக ஜோர்ச் 25 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 7 ஆறு ஓட்டங்கள் 3 நானகு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 65 ஓட்டங்களையும் றோய் 13 பந்துகளில் 27 ஓட்டங்களையும் அணிக்க பெற்றக் கொடு த்தனர்.

பந்து வீச்சில் யங் ஸ்டார் அணி சார்பாக பபிலன் மயூரன் செல்வா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யங் ஸ்டார் அணியினர் 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 78 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத்தில் யங் ஸ்டார் அணி சார்பாக சுஜன் 19 பந்துகளில் 19 ஓட்டங்களையும் தனுசன் 17 பந்துகளில் 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்டார் ஈகிள் அணி சர்ாபாக அஜித் 4 ஓட்டங்களகு;க 3 இலக்குகளையும் அமல் மற்றும் அருன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கெப்பற்றினார்கள். (23)

# தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்து; கடுக்காமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை சம்பியன்

2012 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான மகளிர் காற்பந்தாட்ட போட்டி யில் மண்முனை மேற்கு கல்வி (படுவான்கரை) வலயத்துக் குட்பட்ட கடுக்காமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அகில இலங்கை ரீதியில் சாதனை படைத்துள்ளது.

அகில இலங்கை ரீதியிலான பாடசாலை மகளிர் காற் பந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டி களுத்துறை மாநகர விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

கடுக்காமுனை வாணி வித்தியாலய அணிக்கும் ரோக னபாலிகா கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற போட் டியில் 1:0 என்ற அடிப்படையில் கடுக்காமுனை வாணி வித்தியாலயம் மூன்றாம் இடத்தினை தட்டிக் கொண்டது.




அண்மையில் இடம்பெற்ற கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் வி. க. நடத்திய வடமாகாண ரீதியிலான செற்றப் முறையிலான கரப்பந்தாட்டத்தில் சம்பியனான ஆவரங்கால் மத்திய வி.க. அணியினரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் இலங்கைக்கு அடுத்த கண்டம்!

# மூன்றாவது குழுவிடம் இருந்து தப்பித்துக் கொள்ளுமா அரசு!



ஐ.நா. பொதுச்சபையில் மற்றொரு கண்டம் உருவாகும் என்று அரசாங்கம் நினைத்துக் கூட பார்த்திருக்காது ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் மார்ச் மாத கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானதிற்குப் பின்னர் அடுத்த ஒரு ஆண்டுக்கு சிக்கல் ஏதும் இன்றி இருக்கலாம் என்ற நினைப்பே இலங்கை அரசாங்கத்திடம் மேலோங்கியிருந்தது.

ஆனால் அந்த ஒரு ஆண்டைக் கூட நிம்ம[illegible]க கழித்துவிட முடியாது என்பதை அடுத்த[illegible] நிகழும் சம்பவங்கள் எடுத்துக் காட்டு[illegible].

[illegible]ம்பரில ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் பூகோள கால மீளாய்வுக் கூட்டத் தொடரை சமாளிப்பதற்கான உத்திகள் என்னவென்று தலையை பிய்த்துக்கொண்டிருந்த அரசாங்கத்திற்கு ஐ.நா.பொதுச்சபையின் மூன்றாவது குழுவிலும் கண்டம் உள்ளது என்ற செய்தி கடும் நெருக்குதலைக் கொடுத்துள்ளது.

ஐ.நா.பொதுச் சபையின் 67ஆவது கூட்டத்தொடர் தற்போது நடந்துவருகிறது. இதில் உலகத் தலைவர்களின் உரைகள் கடந்த வாரம் இடம்பெற்றன. ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தப் பொதுசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நியூயோர்க் சென்று ஐ.நாவில் உரையாற்றியிருந்தார்.

கடந்த 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் [illegible]னாதிபதியாக பொறுப்பேற்றப் பின்னர் முதல் முறையாக ஐ.நா. பொதுச்சபைக் கூட்



டத்திற்கு நியூயோர்க் செல்லாமல் தவிர்த்துள்ளார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

**முள்ளிவாய்க்கால் பயணம்**

அவர் ஐ.நாவிற்கு பயணத்தை உறுதி செய்ததால் கடந்த 26ஆம் திகதி பிற்பகல் அமர்வில் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது. எனினும் அவர் பயணத்தை இறுதி நேரத்தில் இரத்து செய்துவிட்டார். நியூயோர்க் செல்லாமல் முள்ளிவாய்க்காலுக்குச் சென்றார் அவர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயணம் கைவிடப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று பொதுச்சபையின் மூன்றாவது குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான மனிதவுரிமைகள் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளதான தகவல்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் இருக்கும் போது அத்தகைய தீர்மானம் கொண்டுவரப்படுமானால் மிகப்பெரிய அவமானமாகி விடும் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டிருந்தது.

அதைவிட நாடுகடந்த தமிழீழ அரசினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான பேரணிக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஏற்கெனவே இத்தகை எதிர்ப்புப் பேரணிகளை அவர் எதிர்கொண்டு வந்த போதிலும் இம் முறை அவருக்கு போதிய பாதுகாப்பு கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்ததாக கூறப்படுகிறது.

**பாதுகாப்பு இல்லாமையே பயணம் தடைப்பட்டது.**

நியூயோர்க்கில் கடந்த காலங்களைப் போல அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்த போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை என்ற புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தாகவும் தகவல்கள் வெளியாகின. இந்த மூன்றும் தான் காரணங்களாக பொதுவாக கருதப்படுகின்ற போதும் அதற்கு அப்பாற்பட்ட விடயங்களும் இருக்கக் கூடும்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பதவிக்காலத்தில் முதன் முறையாக ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தை தவற விட்டுள்ளார். உலகத் தலைவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்திக்க வைப்பது தான் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தின் அடிப்படை நோக்கம்.

இது 67ஆண்டுகால வழக்கம். ஆனால் நாடுகளின் தலைவர்கள் இதில் கட்டாயமாக பங்கேற்க வேண்டும் என்பதே ஒரு விதிமுறையல்ல. அதனால்தான் ஏற்கெனவே சந்திரிகா குமாரதுங்கவும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டங்களில் பங்கேற்காமல் இருந்துள்ளனரே என்ற நியாயத்தைக் கூறியுள்ளது அரசாங்கம்.

கடந்த காலங்களில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், ஆதரவாளர்கள் என்று மிகப்பெரியப் பட்டாளத்துடன் நியூயோர்க் செல்வது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழக்கமாக இருந்தது. ஆனால், இம்முறை அவர் செல்லாதது ஏன் என்ற கேள்வி வெளிநாட்டு ராஜதந்திர வட்டங்களில் இருக்கவே செய்யும்.

**நெருக்கடி நிலையில் ஒதுங்கிக் கொண்டார்.**

அதுவும் சர்வதேச அளவில் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கும் போது அவர் ஒதுங்கிக் கொண்டிருப்பது ஆச்சரியமானது தான். ஆனால் பல கோணங்களிலும் உள்ள நெருக்கடிகளை கருத்தில் கொண்டே அவர் இதனைத் தவிர்த்துக் கொண்டுள்ளார் என்பதை உணர முடிகிறது.

இந் நிலையில் ஐ.நா.பொதுச்சபையின் மூன்றாவது குழுவில் இலங்கையில் மனிதவுரிமை விவகாரம் குறித்து ஆராயப்படவுள்ளதாக வெளியான தகவல் பலரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியுள்ளது காரணம் பலருக்கும் மூன்றாவது குழு என்றால் என்னவென்று தெரியாததுதான்.

மனிதவுரிமைகள் விவகாரங்களை ஆராய ஐ.நாவில் மனிதவுரிமைகள் பேரவையில் இருக்கும் போது பிறகென்ற மூன்றாவது குழுவென்ற கேள்வி பலருக்கும் இருந்தது. - இன்னமும் இருக்கிறது. ஐ.நா. என்பது கிட்டத்தட்ட ஒரு கடல் மாதிரி. அதன்கிளை அமைப்புகளும் செயற் பாடுகளும் அத்தகையது.

**மூன்றாவது குழு**

ஐ.நா.பொதுச் சபையில் முதலாவது குழு, இரண்டாவது குழு, மூன்றாவது குழு, நான்காவது குழு, ஐந்தாவது குழு, ஆறாவது குழு என்று ஆறு முக்கியமான பிரிவுகள் உள்ளன. இதில் மூன்றாவது குழு தான் இப்போது இலங்கைக்குதலைவலியைகொடுக்கப்போகிறது.

சமூக, மனிதாபிமான, கலாசார குழு என்றும் அழைக்கப்படும் இந்தக் குழுவின் கீழ்த்தான் மனிதவுரிமைகள் விவகாரங்களும் வருகின்றன. 66ஆவது கூட்டத் தொடரின் போது மூன்றாவது குழுவின் நிறைவேற்றப்பட்ட 56 தீர்மானங்களில் பாதிக்கு மேலானவை மனிதவுரிமைகள் பற்றியவைதான்.

இம்முறை மூன்றாவது குழுவின் கூட்டத்தில் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 19,20,21ஆவது கூட்டத் தொடர்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்த அறிக்கையை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும். இலங்கைக்கு எதிரான தீர்மானம் 19ஆவது அமர்வில்தான் நிறைவேற்றப்பட்டது என்பதால் அந்த அறிக்கையில் இலங்கையும் குறிப்பிடப்படும்.

**இலங்கைக்கு எதிராக பிரிட்டிஷ் குழு**


அதேவேளை இந்தத் தீர்மானத்திற்கு பிந்திய நிலைமைகள் குறித்தும் இங்கு ஆராயப்படவும் வாய்ப்புகள் உள்ளன. இந்த கட்டத்தில்தான் பிரிட்டிஷ் அரச பிரதிநிதிகள் குழுவொன்று ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் உதவியுடன், இலங்கைக்கு எதிரான மனிதவுரிமைகள் தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சியில் இயங்கியுள்ளது.

இந்தக்குழு பல்வேறு நாடுகளினதும் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டிவருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது அரசுக்கு அதிர்ச்சியான செய்திதான். ஏன் என்றால் இதுவரையும் ஐ.நா.பொதுச் சபையிலிருந்து இத்தகைய நெருக்கடி வரும் என்று அரசாங்கம் எதிர்பார்த்திருக்க வில்லை.

**மூன்றாவது குழுவால் அரசுக்கு கண்டம்.**

ஐ.நா.பாதுகாப்புச் சபை பற்றி இலங்கை அரசாங்கம் எப்போதுமே கவலைப்பட்டதில்லை. அங்கு இலங்கைக்கு ஆதரவாக வீட்டோ அதிகாரங்களைக் கூட பயன்படுத்தத் தக்க நாடுகளான ரஷ்யாவும் சீனாவும் உள்ளன. எனவே பாதுகாப்புச் சபை பற்றி அரசுக்கு கவலையில்லை.




ஆனால்இப்போதுபொதுச்சபையின்மூன்றாவது குழுவில் எழுந்துள்ள கண்டத்தை அரசினால் சுலபமாக எடுத்துக்கொள்ள முடியாது மூன்றாவது குழுவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்பட்டால் ஏற்கெனவேஐ.நா.மனிதவுரிமைகள்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வலுப்படுத்துவதாக மட்டும் அமையாது.

அதற்கும் அப்பால் சர்வதேச சமூகம் இலங்கையை உன்னிப்பாக கவனிக்கவும் செய்யும் இதனால் அரசாங்கம் மூன்றாவது குழுக் கூட்டத்திற்கு அமைச்சர் மகிந்த சமரசிங்கவையும் முன்னாள் சட்டமா அதிபர் மொகான் பீரிசையும் நியூயோர்க் அனுப்பத் தீர்மானித்துள்ளது.

இவர்கள் ஜெனிவா கூட்டத்தொடர்களை கையாள்வதில் பெயர் பெற்றவர்கள் இவர்கள் எப்படி ஐ.நா. பொதுச்சபையின் மூன்றாவது குழுவில் இலங்கைக்கு எதிராக விழப்போகும் சுருக்கு கயிற்றை சமாளிக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள்ளது.

அதேவேளை ஐ.நாவில் மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதற்கு அடுத்த கட்டம் என்னவாக இருக்கும் என்பதும் கேள்வியாகவே உள்ளது.

**ஹரிகரன்**

## இடம் பெயர்ந்தவர்கள் எவரும் நாட்டில் இல்லையாம்

(கொழும்பு)

யுத்த இடம்பெயர் மக்கள் யாரும் கிடையாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வடக்கில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த சகல மக்களும் மீள்குடியேற்றப்பட்டு விட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

200க்கும் குறைவான தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளே தற்போது புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். விரைவில் இந்த முன்னாள் போராளிகள் சமூகத்துடன் மீள இணைக்கப் படுவார்கள்.

முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பினர்களை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். 90 வீதமான நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளது என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக கட்டணங்கள் அறவிடும் தனியார் பஸ்களின் நடத்துநர்கள்

## பயணிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்கள் சில சரியான கட்டணங்களிற்கும் அதிகமான பணத்தினை வசூலிப்பதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பயண அறவீட்டு கட்டணங்களினை அதிகமாக வசூலிப்பதில் காங்கேசன் துறை வீதி மற்றும் பருத்தித்துறை வீதிகளில் போக்குவரத்துக்களில் ஈடுபடும் சில பஸ் நடத்துநர்களே ஈடுபடுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

25 ரூபாய் பணத்திற்கு 30 ரூபாய் கொடுத்தால் 5 ரூபாய் தரமாட்டர்கள் என்ற காலம் போய் தற்போது 30 ரூபாய் கட்டணத்திற்கு 20 ரூபாய்களை தருகின்றனர் இல்லை எனவும் அவர்கள் ஆதங்கம் கொள்கின்றனர்.

மிகுதிக் காசினைக் கேட்டால் மாற்றிய காசு இல்லை என அவர்கள் பதிலளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான வசூல்களில் பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை வீதிகளில் சேவையில் ஈடுபடும் பஸ்களே முன்னிலை வகிப்பதாகவும் மானிப்பாய் வீதியில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் 5 ரூபாய் கொள்ளையடிப்பதில் ஈடுபடுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

25 ரூபாய் கட்டணத்திற்கு பயணிகள் 20 ரூபாய் கொடுக்கும் போது அதனை ஏற்க மறுக்கும் நடத்துநர்கள் எமது 5 ரூபாயினை நாம் எவ்வாறு அவர்களிற்கு கொடுக்க முடியும் எனவும் கேள்வியெழுப்புகின்றனர்.

இதற்கு தனியார் பஸ்களிலும் ரிக்கட் வழங்குவதனை சங்கங்கள் உறுதிப்படுத்தி பயணிகளின் மிகுதிப் பணங்களினை கொடுக்க நடத்துநர்களிற்கு கற்பிக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (எ-4)

# பஸ்ஸில் திருடிய நால்வர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கச் சென்ற பேருந்தில் திருட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நான்கு பேரை செட்டிக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் நெடுந்தூர பயணங்களை மேற்கொள்ளும் பேருந்துகளில் திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான மூன்று பேரும் 24 வயதுக்கு குறைவானவர்கள் என்றும் இவர்களில் மூன்று இளைஞர்களும் ஒரு யுவதியும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தங்களது உள்ளாடைகளில் மறைத்து வைத்திருந்த 97 ஆயிரம் ரூபாய்களும் மீட்கப்பட்டுள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கை அம்பாறை அதிகாரிகள் திண்டாட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பிரதேச செயலகங்களுக்கு அம்பாறை மாவட்ட செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள் யாவும் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்படுவதால் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலகங்களில் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்புச் செய்வதற்கு மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டி மாவட்ட செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் சுற்றறிக்கைகள், கடிதங்களை தமிழ் மொழியில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் அம்பாறை மாவட்ட செயலாளருக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தமிழ் மொழி அரச கருமமொழியாக சட்ட அமுலாக்கம் செய்யப்பட்டிருந்தும் கூட அம்பாறை மாவட்ட செயலகத்திலிருந்து தற்போது அனுப்பி வைக்கப்பட்டு வரும் சகல ஆவணங்களும் சிங்கள மொழியிலேயே அமைந்திருப்பதும் இங்கு கவலை தரக் கூடியதாகவுள்ளது.

இது நிர்வாக ரீதியான செயற்றிட்டங்களுக்கு பின்னடைவையே ஏற்படுத்தும். எனவே இந்த விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தி மாவட்ட செயலகத்தில் அனுபவம் வாய்ந்த ஒரு தமிழ் மொழி பெயர்ப்பாளரை நியமித்து தமிழ் மொழியில் சுற்றறிக்கைகள், கடிதங்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொ[illegible]கப்பட்டுள்ளது. (எ-[illegible])

## இன்றைய போட்டிகள்

நியூசிலாந்து – மேற்கிந்தியத்தீவுகள்
மாலை 3.30 மணி - பல்லேகல

இலங்கை – இங்கிலாந்து
இரவு 7.30 மணி - பல்லேகல

# அச்சுறுத்தல்கள் தொடர்...

இங்கு உரையாற்றிய சம உரிமைகளுக்கான அமைப்பின் தேசிய அமைப்பாளர் ஜூட் சில்வா புள்ளே, மக்களை இன, மத, சாதி எனப் பிரித்து ஆட்சி செய்யும் முதலாளித்துவ தேவையை தோற்கடித்து, சம உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை இங்கு வந்துள்ள பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த எதிர்பார்ப்பைக் கொண்டுள்ள பலர் நாட்டில் பரந்துபட்டு வாழ்கின்றனர். நாம் அவர்கள் மத்தியில் செல்ல வேண்டும். தமிழர்களுக்காகப் போராடும் சிங்களவர்கள், முஸ்லிம்கள், முஸ்லிம்களுக்காகப் போராடும் தமிழர்கள், சிங்களவர்கள், சிங்களவர்களுக்காகப் போராடும் தமிழர்கள், முஸ்லிம்கள் இருக்கும் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதே சம உரிமைகளுக்கான அமைப்பின் நோக்கம் என அவர் கூறியுள்ளார்.

அதேவேளை இங்கு உரையாற்றிய, சம உரிமை அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் கே.கிருபாகரன், போர் முடிந்த பின்னர் சிங்களவர்கள் வெற்றி பெற்றனர். தமிழர்கள் தோல்வியடைந்தனர் என அரசாங்கம் கூறியது. அரசாங்கம் எப்படி அவ்வாறு கூற முடியும் அனைவரும் தோற்றுப் போய்விட்டனர் என நாம் எண்ணுகின்றோம்.

போர் நடைபெற்ற காலத்தில் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாது எனத் தெரிவித்தனர். தற்போது போர் முடிந்து விட்டது. ஆனால் போர் நடைபெற்ற காலத்தை விட பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

தற்போது வடக்கு, கிழக்கில் தமிழர்கள் வாழும் கிராமங்களுக்கு சிங்கள பெயர்களை சூட்டுகின்றனர். விகாரைகளை அமைக்கின்றனர். வெசாக், பொசான், பௌர்ணமி நாட்களில் தானம் வழங்குகின்றனர். நாம் முன்னர் இருந்த காலத்தில் இருந்த பெயர்கள் அந்தக் கிராமங்களில் இல்லை.

சிங்களவர்கள் எவரும் இல்லாத கிராமங்களுக்கு சிங்கள பெயர்களை சூட்டுவதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமானால், விகாரைகளை அமைப்பதை ஏற்றுக்கொள்ளுமானால், தம்புள்ளை முஸ்லிம் பள்ளிவாசல் இருப்பதை ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது? அப்படியானால் அதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள பிரச்சினையை சிங்களவர், தமிழர், முஸ்லிம் எனத் தீர்க்க முடியாது. அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அனைவரும் இணைந்து இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும். இப்படிப் பேசுவதால் என்னையும் அச்சுறுத்தக் கூடும். எனினும் நாங்கள் இதனைப் பேச வேண்டும்.

இன்று நாம் வாய்களை மூடிக் கொண்டிருந்தால், இந்த நிலைமை தொடரும். இன்னும் 15 வருடங்களில் நாங்கள் இருக்கப் போவதில்லை. அப்போது இருக்கும் பிள்ளைகளுக்கு விடுதலைப் புலிகள் யார் என்பது தெரியாது. போர் இருந்ததா என்பதைக் கூட அறிந்திருக்க மாட்டார்கள். இந்தப்பிரச்சினை தெரியாது.

இன்று நாம் வாய்களை மூடிக் கொண்டிருந் தால், இன்னும் 15 வருடங்களில் விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகுவார்கள் எனவும் கிருபாகரன் கூறியுள்ளார். (எ-11)


## திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி

### அறிவித்தல்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கலைக் காவிரி நுண் கலைக்கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து எமது கல்லூரி நடத்தும் வளாகம் கடந்த பரத நாட்டிய பட்டப்படிப்புகள்

- ★ முதுகலைமாணி M.F.A
- ★ இளங்கலைமாணி B.F.A
- ★ பெருஞ்சான்றிதழ் கற்கைநெறி Diploma

ஆகியவற்றுக்கான இவ்வாண்டுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 05.10.2012 வெள்ளிக்கிழமை ஆகும். இக்கற்கை நெறிகளில் இணைந்து பட்டப்படிப்புகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு முன்பாக கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு

அதிபர், கலைத்தூது அழகியல் கல்லூரி,
128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 9419


# பயங்கரவாதத்தை...

கடற்கொள்ளைச் சம்பவங்களைத் தடுத்தல் தொடர்பில் புதிய சட்டங்களை உருவாக்குதல், பிராந்திய வலய பாதுகாப்பு தொடர்பில் தகவல் பரிமாற்றம், புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது தொடர்பில் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் சவால்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக அமைச்சர் செனவிரட்ன குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசிய பிராந்திய வலய சுதேச விவகார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# நல்லிணக்க முனை...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

1980களில் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இந்தியாவே பயிற்சி அளித்தது. 2009 வன்னி யுத்த முன்னகர்வுகளை தடுத்து நிறுத்த இந்தியா, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் முயற்சி செய்ததாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரபாகரனோ, பொட்டு அம்மானோ அல்லது சூசையோ உயிருடன் இருந்திருந்தால் சர்வதேச சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறித்து கவனம் செலுத்தியிருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் எப்போது தேர்தல் நடத்த வேண்டும் என்பது பற்றி இந்திய ஊடகங்களின் ஆலோசனை அவசியமற்றது என இலங்கை அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

அண்மையில் இலங்கை விவகாரம் தொடர்பில் த இந்து உள்ளிட்ட இந்தியாவின் [illegible]கிய ஊடகங்களில் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இந்திய உ...

ஏற்கெனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் போன்றோரைச் சந்திக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# புலிகள் மீதான...

அதில் விடுதலைப் புலிகளும், அதன் ஆதரவு அமைப்புக்களும் மேற்கொண்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் ஆவணங்கள் என்று அவர் கூறினார்.

மேலும் விடுதலைப் புலிகளின் அரசியல் அணியான மக்கள் முன்னணி சார்பில் தமிழகத்தையும், ஈழத்தையும் இணைத்து விரிந்த தமிழகம் அமைக்கும் திட்டம் இருப்பதாகவும், அதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் சம்பத் கூறினார்.

ஆனால், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ இதை மறுத்து வாதிட்டார். விடுதலைப் புலிகளுக்குத் தமிழகத்தைப் பிரிக்கும் எண்ணம் இருந்ததில்லை. மக்கள் முன்னணி 1991-லேயே கலைக்கப்பட்டு விட்டது என்றும் வைகோ கூறினார்.

இதற்குச் சம்பத், அந்த அமைப்பு கலைக்கப்பட்டதாக இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் விடுதலைப் புலிகள் வெளியிடப்படவில்லை. மேலும் அந்த அமைப்பின் சார்பில் வலைத்தளங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று வாதிட்டார்.

இந்த விசாரணை சுமார் அரைமணி நேரம் நடைபெற்றது.

இதன்பின் நீதிபதி வி.கே.ஜெயின் அடுத்த விசாரணை கொடைக்கானலில் ஒக்ரோபர் 20, 21-ம் திகதிகளில் நடைபெறும் என உத்தரவிட்டார். (எ-11)

# இலங்கை...

தூதுவர் கிறீட் லோக்சன், பசிலை அவரது அமைச்சில் சந்தித்த போது கூறியுள்ளார்.

இலங்கை மீன்பிடி மற்றும் சுற்றுலா அபிவிருத்திக்காக நோர்வே, இலங்கைக்கு உதவி வழங்கி வருகிறது. இந்த நிலையில், இலங்கை மற்றும் நோர்வே முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் இடையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வது சிறந்தது எனவும் தூதுவர் கூறியுள்ளார். (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org